REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :36
கதிர் : 04

கார்த்திகை 15
திங்கட்கிழமை

30 நவம்பர் 2020
வள்ளுவர் ஆண்டு 2051

## மேலும் 7 பேர் சாவு கொரோனா பலி 116

23 ஆயிரத்தைக் கடந்தது தொற்றாளர்கள் எண்ணிக்கை

20

தமிழர் தாயகத்தில்

## கார்த்திகை விளக்கீடு: படையினர் அடாவடி!!

- வாழைக் குற்றிகளை காலால் எட்டி உதைத்த பொலிஸார்
- பரந்தனில் சிட்டிகளை ஏறி மிதித்து உடைத்த படையினர்

19

## தீவகப் பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்

கிளிநொச்சி தொடர்பில் இன்று முடிவு

யாழ்ப்பாணம், நவ. 30

தீவக வலய பாடசாலைகள் இன்று வழமைபோல் இயங்கும். கிளிநொச்சி பாடசாலைகள் தொடர்பில் இன்றைய தினம் முடிவு எடுக்கப்படும். இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்

19

கொரோனாத் தொற்று ஆபத்தால்

## மஹர சிறைக்குள் பெரும் களேபரம்

## துப்பாக்கிச்சூட்டில் 4 கைதிகள் பலி

25 பேருக்கு காயம்

புகைமண்டலமாகியது சிறைச்சாலை

வெளியே உறவினர்கள் போராட்டம்

19

கார்த்திகை விளக்கீடு என்ற பெயரில்

# மாவீரர் நாளை நினைவுகூர முற்பட்டமையாலேயே தடை!

**பொலிஸ், இராணுவத்தின் அடாவடிகளை நியாயப்படுத்துகிறார் அமைச்சரவை பேச்சாளர்**

யாழ்ப்பாணம், நவம்பர் 30

கார்த்திகை விளக்கீடு என்ற பெயரில் மாவீரர்களைத் தமிழ் மக்கள் நினைவுகூர முற்பட்டமையால் தான் நேற்று சில இடங்களில் தீபங்களை ஏற்றப் பொலிஸார் தடை விதித்தனர். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

19

## விளக்கு ஏற்றிய பல்கலை மாணவன் கைதாகி விடுதலை

20

## விளக்கேற்றிய முதியவர் கிணற்றில் வீழ்ந்து சாவு!

19




முச்சந்தி முரளி

## வேலியை எரித்த வட்டு. பொலிஸார்

அராலி மத்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ.30

கார்த்திகை விளக்கீடான நேற்றையதினம் இனந்தெரியாதோரால் கொழுத்தப்பட்ட ரயர் ஒன்றை பொலிஸார் வீட்டின் வேலியில் தூக்கி வீசியதில் அந்த வேலி எரிந்து நாசமாகியுள்

14

## கோத்தாபய அரசின் உச்சபட்ச அராஜகம்



சம்பந்தன் கொந்தளிப்பு

கொழும்பு, நவ. 30

தமிழ் மக்கள் தங்கள் பண்டிகைகளையும் சுதந்திரமாகக் கொண்டாட முடியாத நிலையை அரசும் அதன் படைகளும் ஏற்படுத்தியுள்ளன. நேற்றுப் பல இடங்களில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தடை விதித்தமையும், யாழ். பல்கலைக்கழக வாயிலில் தீபம்

19

## நீதிமன்ற உத்தரவை மீறுவதை நாங்கள் எப்படி அனுமதிப்பது?

விளக்கீட்டுக்கான இடையூறுகள் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் இப்படியொரு விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 30

வடக்கு, கிழக்கில் பொது இடங்களில் நினைவேந்தல் நடத்த, நிகழ்வுகள் நடத்த, ஒன்றுகூட இம்மாதம் 30ஆம் திகதி வரை நீதிமன்றத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதை மீறி அங்கு சில நடவடிக்கை

19



## காரைநகர் இந்துக் கல்லூரி மூன்று நாள்களுக்குப் பூட்டு

யாழ்ப்பாணம், நவ. 30

காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாள்கள் மூடப்படுகிறது என வடமாகாண கல்வி அமைச்சின் செயலர், எல். இளங்கோவன் அறிவித்துள்

14

## வீடு புகுந்து வாள்வெட்டு வீட்டு இளைஞன் மாயம்

வடமராட்சியில் நள்ளிரவு அட்டகாசம்
பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், நவ.30

வடமராட்சி, பருத்தித்துறையில் வாள்களுடன் கும்பல் ஒன்று வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அந்த வீட்டிலிருந்த பொருள்களும்

14

## கே.கே.எஸ். கடலில் மூழ்கி 19 வயது மாணவன் சாவு!



மற்றுமொருவர் மாயம்

யாழ்ப்பாணம், நவ.30

காங்கேசன்துறைக் கடலில் குளிக்கச் சென்ற ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இன்னொருவர் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப்


19







இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்றான காத்திகை தீபத் திருநாளான நேற்று ஆலயங்கள், வீடுகள், சனசமூக நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில கங்கள் எனப் பல இடங்களிலும் காத்திகை தீபம் ஏற்றப் பட்டு, பண்டிகை சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. யாழ். குடாநாடெங்கும் நேற்று மாலை தீப ஒளியாகவே காணப்பட்டது.



### யாழ்ப்பாணத்தை

# முடக்கும் தீர்மானம் இதுவரை இல்லை

### ஆ.கேதீஸ்வரன் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாண மாவட்டத்தை முழுவதும் முடக்குவது தொடர்பில் இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில்,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அண்மை யில் வருகை தந்து சுகாதார மருத்துவ அதிகாரிக்கு எவ்வித தகவலையும் வழங்காமல்;, சுயதனி மைப் படுத்தலையும் கடைப்பிடிக்காத காரைநகரைச் சேர்ந்த ஒருவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர் சென்று வந்த அனைத்து நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன மறு அறிவித்தல் வரை மூடப் பட்டுள்ள துடன் நூற்றுக்கணக்கானவர்கள் சுயதனி மைப்ப டுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எனினும், இதனால் யாழ். மாவட்டம் முழுவதும் முடக் கப்படும் என்று சில ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் அனைத்தும் தவறானவை. சுயதனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நூற்றுக் கணக்கானவர்களில் காரைநகரில் வசிக்கும் 97 குடும்பங்களைச் சேர்ந்த 373 பேரும் உள்ளடங்கு வர். இவர்களுக்கு செய்யப்படும் பி.சி.ஆர். பரிசோ தனைகளில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டால் மாத்திரமே காரைநகர் பிரதேசம் மட்டும் முடக்கப்படும். இதனால் யாழ். மாவட்டம் முழுவதும் முடக்கப்படுவது தொடர்பான தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை, என்றுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:

29.11.2020ஆம் திகதிய உதயனில் 'தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளோரின் பி.சி.ஆர். முடிவுகளைப் பொறுத்து குடாநாட்டை முடக்குவது தொடர்பில் தீர் மானம்' என்ற தலைப்புச் செய்தி பிரசுரமாகியிருந்தது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் 'சில ஊடகங்க ளில்' என்று குறிப்பிட்டிருந்தாலும் உதயனிலும் அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தமையால் அது தொடர்பில் 'உதயன்' விளக்கமளிக்கின்றான். காரை நகர் தொற்றாளர் பொறுப்பற்ற வகையில் குடாநாடு முழுவதும் சுற்றித் திரிந்தமையால் காரைநகருக்கு வெளியேயும் பல இடங்கள் மூடப்பட்டுள்ளதுடன் பலர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் யாழ்ப்பாணம் முடக்கப்படுமா என்ற அச்சம் மக்க ளுக்கு எழுந்திருந்தது. அதனையே 'உதயன்' சுகா தார சேவைகள் பணிப்பாளரிடம் 28.11.2020 அன்று இரவு தொலைபேசியூடாக வினவியிருந்தான். அதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர், இதுவரை அவ்வாறானதொரு தீர்மானம் இல்லை என்றும், தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு மேற்கொள் ளப்படும் பி.சி.ஆர். சோதனை முடிவுகளைப் பொறுத்துமே முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித் திருந்தார். அவர் தெரிவித்த கருத்தை 'உதயன்' அப்படியே பிரசுரித்திருந்தான். (ஆ ர்)


## கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் ஒளிர்ந்த தீபங்கள்



யாழ்ப்பாணம், நவ.30

இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்றான கார்த்திகை தீபத் திருநாளான நேற்று கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலை யத்தில் சிகிச்சை பெற்று வருபவர்களும், கார்த்திகை தீபம் ஏற்றி வழிபாடுகளைச் செய்துள்ளனர்.

அந்தச் சிகிச்சை நிலையத்தில் கடமையில் இருந்தவர்களும் அவர்கள் பகுதிகளில் ஒளி ஏற்றி வழிபாடு செய்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. கொவிட் 19 என்று தீபத்தால் எழுதப்பட்டு அங்கு எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டன. (ப)



### சட்டவிரோதமாக

## இந்தியா செல்ல முற்பட்ட 7 பேர் மன்னாரில் கைது

மன்னார், நவ.30

மன்னாரில் இருந்து இந்தியா வுக்கு கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்ல முற்பட்டனரென 7 பேர் கடற்படையினரால் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 7 பேரே பேசாலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித் தனர்.

கடற்படையினரால் முன்னெடுக் கப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர் என்றும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவ ரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரி வித்துள்ளனர். கைதுசெய்யப் பட்ட அவர்கள் பேசாலைப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள னர். (ப-56)

## இளைஞன் சடலமாக மீட்பு

கொடிகாமம், நவ.30

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வரணிப் பகுதியில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலை யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற் றுள்ளது. '

வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த மகேந்திரம் தினோஜன் (வயது -24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசார ணைளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டனர். (ப-159)

### வடக்குக்கு

## தொழில் நிமித்தம் வந்த 5 பேருக்கு கொரோனா!!

யாழ்ப்பாணம், நவ. 30

வடக்கு மாகாணத்துக்கு வெளியிலிருந்து தொழில் நிமித்தம் வந்தவர்களில் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலர் பிரிவில் 3 பேருக்கும், மடு பிரதேச செயலர் பிரிவில் ஒருவருக்கும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

சிலாபத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் மீன் பிடி நடவடிக்கைக்காக மன்னாருக்கு வந்த போது தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்க ளுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 3 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மடு பிரதேச செயலர் பிரிவில் கொழும்பிலி ருந்து திரும்பிய ஒருவர் வீட்டில் சுயதனி மைப் படுத்தலில் இருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிர தேச செயலர் பிரிவில், மாகா நிறுவனத்தில் ஏற்கனவே ஒருவர் தொற்றுடன் கண்டறியப் பட்ட நிலையில் அவருடன் பணியாற்றிய சாரதி ஒருவர் தனிமைப்படுத்தில் இருந்த நிலையில் அவருக்கும் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. (ஓ.5)

# பயங்கரவாதப் பிரச்சினை யாழில் இப்போது இல்லை!

## பொலிஸ் பேச்சாளர் சாட்சியம்

**கொழும்பு, நவ. 30**

**அன்று யாழ்ப்பாணத்தில் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினைகள் இன்று இல்லை.இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத் தைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் முன் வைக்கப்பட்டுள்ள சில முக்கிய பரிந்துரைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இறுதிச் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படவில்லை' எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

'பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் ஒழிப்பு தொடர்பில் நாட்டிலுள்ள சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தினார். பொலிஸ் சட்டப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகி நாடாளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் சாட்சியம் வழங்கும் போது மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டில் தற்போதுள்ள பயங்கர வாதப் பிரச்சினைகளுக்கு எதிராக 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க தற்காலிக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போதுமானதாக இல்லை என்பதை அப்போதைய அரசு 2016 இல் உணர்ந்துகொண் டது.

ஏனென்றால் 1979ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய பயங்க ரவாதப் பிரச்சினைகள் இப்போது நாட்டில் இல்லை.

பயங்கரவாதம் மற்றும் விசாரணை கள் தொடர்பாக உலகில் தற்போது நடைமுறையில் உள்ள நடை முறைகளுக்கு ஏற்ப பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர அப்போதைய பிரதமர் தலைமை யில் குழு ஒன்று நியமிக்கப்பட் டது.


அதில் முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக இருந்த சாகல ரத்நாயக்க உள்ளிட்ட 12 பேர் அங்கம் வகித்தனர். அந்தக் குழு 27 தடவைகளுக்கு மேல் கூடி, முக்கியமான சட்ட உட்பிரிவுகள் குறித்து கலந்துரையாடி சில சரத் துக்களை உட்சேர்க்கவும், நீக்கவும் தீர்மானித்ததுடன் அதற்கமைவாக சட்டமூலத்தைத் தயாரித்தது.

எனினும், இவ்வாறு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை யில் முன்வைக்கப்பட்ட சில முக்கிய பரிந்துரைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இறுதிச் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்படவில்லை.

சஹ்ரான் எவ்வாறு பயங்கரவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்தார்? மற்றவர்களுடன் தொடர்பைப் பேணியது எவ்வாறு? இந்த விட யங்கள் உங்களுக்கு அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்திருக் கும். முன்பு தாக்குதல்கள் காட்டுக் குள் தீர்மானிக்கப்பட்டன.

ஆனால், சஹ்ரான் அவ்வாறு செய்யவில்லை. இணையம் வந்த திலிருந்து அனைத்தும் மாறியது.

எப்படியிருப்பினும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் முன்வைக் கப்பட்ட பரிந்துரைகளில் உளவு பார்ப்பது என்ற பிரிவின் கீழ் தவறு ஒன்று இழைக்கப்பட்டது. எனினும், இறுதியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் அந்த விடயம் உள்ளடக்கப்பட வில்லை. எனினும், பின்பு வெளி விவகார அமைச்சர் தினேஷ் குண வர்த்தன அந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை விலக்கிக் கொண்டார்' என்றார். (ம-22)



# நல்லை மண்ணில் 'சிவகுரு' ஆதீனம்

யாழ்ப்பாணம், நவ. 30

திருக்கார்த்திகைத் திருநாளான நேற்றுக் காலை 10 மணிக்கு நல்லைக் கந்தனின் மணி ஒலிக்கும் நேரத்தில் சிவகுரு ஆச்சிரமம் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

நல்லூர் கந்தன் ஆலய வழிபாட்டை அடுத்து கோமாதா வழிபாட்டுடன் இந்த சிவகுரு ஆதீ னம் நேற்று முற்பகலில் சிவகுரு ஆதீன முதல் வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஆதினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-20)



# ஆலய ஆலமரத்தில் அம்மன் திருவுருவம்

## மட்டக்களப்பில் அதிசயம்

மட்டக்களப்பு, நவ.30

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலயத் திலுள்ள ஆலமரமொன்றில் அம்மனின் திரு வுருவம் காட்சியளிப்பதைத் தொடர்ந்து மக்கள் நேற்று அங்கு படையெடுத்துச் சென்றனர்.

இந்த ஆலயத்திலுள்ள 80 வருடம் பழமை வாய்ந்த ஆலமரத்தின் விழுதில் அம்மனின் உருவம் பொறிக்கப்பட்டது போன்ற திருவுருவம் காட்சியளிக்கின்றது.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்த ஆலயத் தில் அம்மன் உருவம் தோன்றியதால் ஏதும் அசம்பாவிதங்கள் இடம்பெற வாய்ப்புள்ளதா என்ற அச்சம் மக்கள் மத்தியில் நிலவி வரு கின்றது.

இதன் காரணமாக மக்கள் மிகுந்த பயத்துடன் இந்த உருவச்சிலையும் ஆலயத்திலுள்ள அம் பாளையும் வழிபட்டு வருகின்றனர். இந்த ஆலயத்தில் அம்மன் உருவம் தோன்றியதை யடுத்து, ஆலயத்தின் பிரதம குரு சத்திய புவே னேஸ்வர சிவாச்சாரியார் விஷேட பூஜையை நடத்தினார். (ற-இ)



**கொரோனா பெருந்தொற்று**

# 40 நோயாளர்கள் நேற்று கிளிநொச்சிக்கு மாற்றம்

கிளிநொச்சி, நவ. 30

யாழ். மருதங்கேணி மற்றும் மாங்குளம் மருத்து வமனையில் சிகிச்சை பெற்றுவந்த 40 நோயாளர் கள் கிளிநொச்சிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட தொற்று நோயியல் மருத்து வமனைக்கு இவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாற்றப்பட்டனர்.

யாழ் மருதங்கேணி மருத்துவமனை தற்காலிகமாக கொரோனா சிகிச்சை நிலையமாக இயங்கி வந்தது. அங்கு சிகிச்சை பெற்று வந்த 30 பேரும் முல்லைத் தீவு முள்ளியவளை கொரோனா சிகிச்சை நிலை யத்தில் சிகிச்சை பெற்றுவந்த 10 பேருமே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி வைத்தியசாலையின் வெளிநோயா ளர் பிரிவு பிரிதொரு இடத்தில் இடம்பெற்று வந்த நிலையில் வழமை போன்று மருத்துவமனையின் செயற்பாடுகள் எதிர் வரும் காலங்களில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-6)

# அலரி மாளிகை முற்றாக முடக்கம்

## உறுதிப்படுத்தினார் பஸில்

கொழும்பு, நவ. 30

'அலரி மாளிகை முடக்கப்பட்டுள்ளது. நான்கூட அங்குசென்று பணியாற்ற முடியாதுள்ளது இவ்வாறு பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ச கொழும்பு ஊடக மொன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகை முடக்கப்படவில்லை என பிரதம ரின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ள கருத்து குறித் தும் அவர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அலரி மாளிகை முடக்கப்படவில்லை என்று பிரதமரின் ஊடக செயலாளர் சொன்னது முற்றிலும் பொய். அலரி மாளிகை முற்றாக முடக்கப்பட்டுள்ளது. என்னால் அங் குள்ள அலுவலகங்களைப் பயன்படுத்த முடியவில்லை. உண்மையை அறிய விரும்பினால் யாரையாவது அனுப்பிப் பார்க்கலாம். அந்தப் பகுதி முற்றாக மூடப்பட் டுள்ளது. பணியாளர்களை வீட்டிலிருந்து பணிபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (ம-22)

# சிறையிலிருந்து தப்பமுயன்ற நால்வர் கைது

கொழும்பு, நவ. 30

போகம்பரை சிறைச்சாலையிலி ருந்து தப்ப முயன்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன் தினம் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது. போகம்பரை பழைய சிறைச்சாலையில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த நால்வரே தப்பிச் செல்வதற்கு முயன்றுள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகள் எச்ச ரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து இவர் களைக் கைதுசெய்துள்ளனர். (ம-9)

# காணாமல் போனோருக்கான நீதி இனியும் தாமதிக்கப்படக்கூடாது

## சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

**கொழும்பு, நவ.30**
**காணாமல் போனோரது உறவினர்களுக்கு உரிய நீதியையும் இழப்பீட்டையும் இலங்கை அரசு வழங்கவேண்டும் என சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.**



சர்வதேச மன்னிப்பு சபையின் பொதுச் செயலாளரது அலுவலகத்தின் பணிப்பாளர் டேவிட் க்ரிஃப்த் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,
போரினால் அல்லது அரசியல் நெருக்கடிகளால் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர் பட்டியலை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.
இது சிறந்ததோர் நகர்வு. நீண்ட காலமாக தங்களது உறவுகளைத் தேடி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். ஆகையால் இவ்விடயங்களில் அரசு இனியும் காலம் தாமதிக்காமல் உரிய நட வடிக்கைகளை மேற்கொள்ள உடனடியாக முன்வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## பி.சி.ஆர். சோதனையில் பிரதமர் குடும்பம்

பிரதமர் மகிந்த ராஜபக்ச,அவரது மனைவி சிராந்தி ராஜபக்ச மற்றும் அவர்களது மகன் நாமல் ராஜபக்ச ஆகியோர் தங்களை பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்திக்கொண்ட னர் என சண்டே டைம்ஸ் தெரிவித்துள்ளது.
மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இச் சோதனை மேற்கொள்ளப்பட்டது எனவும் பரிசோதனை முடிவுகளில் அவர்கள் தொற்றால் பாதிக்கப் படவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-இ)

## புதிய முதலீடுகளில் இந்தியா ஆர்வம்

### இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தகவல்

கொழும்பு, நவ.30
இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் புதிய பகுதிகளை அடையாளம் கண்டு முதலீடு செய்ய இந்தியா விருப்பம் கொண்டுள்ளது என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு வருகை தந்துள்ள அஜித் டோவலுக்கும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.
இதன்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
சந்திப்பின்போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், பாதுகாப்பு ஒத்துழைப்பு, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், இலங்கையில் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர். (வ-இ)

## அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.30
நாட்டில் அரிசிக்கு எந்தவொரு தட்டுப்பாடும் இல்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.
நெல் சந்தைப்படுத்தல் களஞ்சியத்தில் அடுத்த ஐந்து மாதங்களுக்கு போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது. நாட்டுக்குத் தேவையான 95% உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் என்பன தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றன.
ஜனவரி 2024 க்குள் இவை எதுவும் இறக்குமதி செய்யப்பட்டாது. அவையெல்லாம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## பாதாளக்குழு உறுப்பினர் ஆயுதங்களுடன் கைது



கொழும்பு, நவ.30
பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த முக்கிய நபரெனச் சந்தேகிக்கப்படும் மஹரகமவைச் சேர்ந்த சமீர மதுஷங்க என்ற நபர் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, இவரிடமிருந்த ரஷ்ய தயாரிப்பு மைக்ரோ ரக பிஸ்தோல், துப்பாக்கி ரவைகள் மற்றும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. (ந-இ)



## களுத்துறையில் கொரோனா தீவிரமாகும் நிலை!

கொழும்பு, நவ. 30
களுத்துறை, அட்டலுகம பகுதியில் கொரோனா வைரஸ் மேலும் தீவிரமாகலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் தொற்று ஏற்பட்ட பலரும் அதேபோல தொற்று சந்தேகத்தில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்ட பலரும் தலைமறைவாகியுள்ளதை அடுத்தே கொரோனா தடுப்பு செயலணியால் மேற்படி அச்சம் வெளியிடப்பட்டது.
பலர் தங்களது உண்மையான முகவரியை வழங்காமல் போலி முகவரிகளை வழங்கியுள்ளனர் எனவும் அந்தச் செயலணி சுட்டிக்காட்டியுள்ளது. (ம-இ)

## கொள்கலன் தேக்கம்: ஏற்றுமதியில் வீழ்ச்சி!

கொழும்பு, நவ.30
கொழும்புத் துறைமுகத்தில் சுமார் 20 ஆயிரம் கொள்கலன்கள் தேங்கியுள்ளன என்று துறைமுக அதிகாரசபையின் தலைவர் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.
இதன்காரணமாக புதிய கொள்கலன்களை கையகப்படுத்துவதில் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
வழமையாக நாளொன்றுக்கு கொழும்பு துறைமுகத்தில் 800 - 1000 வரையான ஏற்றுமதிக் கொள்கலன்களின் பரிமாற்றம் இடம்பெறுகிறது. எனினும் தற்போது அது 500 என்ற அளவிலேயே மேற்கொள்ளப்படுகிறது.
இதனால் கொழும்புக்கு வரவேண்டிய கப்பல்கள் இந்தியா, பங்களாதேஸ் மற்றும் சிங்கப்பூர் துறைமுகங்களை நோக்கி செல்கின்றன என துறைமுக அதிகாரசபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

# தனிமையிலுள்ள இடங்களில் தபால் சேவையை ஆரம்பிக்க தயார்

### தபால் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, நவ.30
தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தபால் சேவைகளை மீள ஆரம்பிக்கத் தயாராக உள்ளோம் என தபால் திணைக்கள பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்துள்ளார். தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அரச, தனியார் நிறுவனங்கள் தபால் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் இதனை மேற்கொள்ள முடியும்.
குருநாகல் மாவட்டத்தில் முடக்கப்பட்டுள்ள தபால் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செக்கென்ன? சிவலிங்கமென்ன?

புதிய ராஜபக்ச அரசு பதவியேற்ற பின்னர் தமிழ் மக்கள் மீண்டும் நெருக்கடிகளை உணரத் தொடங்கியுள்ளனர். இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற கோசத்தை முன்னிறுத்தி தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்கி வந்த அரசு ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, மாவீரர் நாளைக் கடித்து இப்போது தமிழ் மக்களின் மத நிகழ்வுகளிலும் கைவைக்க ஆரம்பித்துவிட்டது.

சில நாள்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் ஆண்டுதோறும் அமைதியாகக் கடைப்பிடிக்கும் தங்கள் உறவுகளை நினைகூரும் மாவீரர் நினைவேந்தலுக்கு ஆட்சியாளர்கள் தடை ஏற்படுத்தியிருந்தனர். தமிழ் மக்கள் தங்கள் இரத்த உரித்துக்களை நினைவேந்தும் உரிமைக்காக நீதிமன்றங்களின் முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் நிலை ஏற்பட்டது. முடிவில் ஆட்சியாளர்களின் ஆசைப்படியே எல்லாம் நடந்தது. தமிழ் மக்கள் மாவீரர்களுக்கான நினைவேந்தலை பொது இடங்களில் செய்ய முடியாது போனது. ஆனாலும் தமிழ் மக்கள் தங்கள் வீடுகளில் உணர்வெழுச்சியுடன் சுடரேற்றி நினைவேந்தலை நடத்தியிருந்தனர்.

கார்த்திகை மாதத்தில் தமிழ் மக்களின் இந்துக்களின் முக்கிய சமய நிகழ்வு கார்த்திகைத் தீபத் திருவிழா. கார்த்திகைத் தீபத் திருவிழா அன்று ஆலயங்களிலும், வீடுகளிலும் தீபங்கள் ஏற்றப்படும். ஆலயங்களில் சொக்கப்பனை எரிக்கப்படும். இது ஒரு மிகப் பழமையான பண்டிகை. இந்தப் பண்டிகை பற்றி தமிழின் தொன்மையான இலக்கியங்களில் கூடப் பேசப்பட்டிருக்கின்றது.

இப்படியான ஒரு பழமையான திருவிழாவை– வழிபாட்டைச் செய்வதற்கும் தமிழ் மக்களுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நேற்று வடக்கில் யாழ்ப்பாணத்தில் கார்த்திகைத் திருவிழாவுக்குத் தயாரான ஆலயங்களுக்குச் சென்று பொலிஸார் வழிபாட்டைத் தடுத்துள்ளனர். சில ஆலயங்களில் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை கால்களால் உதைத்து வீழ்த்தி அராஜகங்கள் செய்திருக்கிறார்கள். தடைகளை மீறி தமிழ் மக்கள் நடத்திய நினைவேந்தலும், கொழுத்து விட்டெரிந்த தீபங்களும் ஏற்படுத்திய வெப்பிராயத்தின் வடிகாலாகவே பொலிஸார் இவ்வாறு நடந்திருக்கிறார்கள் என்றும் கொள்ளலாம்.

இப்படியான நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல்கள் ஒருபோதும் ஒற்றுமைக்கு வழிவகுக்கப் போவதில்லை. உரிமைகள் மறுக்கப்பட மறுக்கப்பட தமிழ் மக்கள் மனங்களில் இது எமது நாடில்லை எமக்கான அரசு இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்த ஆரம்பிக்கும். காலப்போக்கில் அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும். ஆனால் அதைப்பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு ஆட்சியாளர்களும் தயாரில்லை, அவர்களின் ஏவலாளர்களும் தயாரில்லை.

இந்து ஆலயங்களில் வழிபாட்டு ஏற்பாடுகளைக் கால்களால் எட்டி உதைந்து அராஜகம் செய்த பொலிஸார், பௌத்த விகாரைகளிலோ, பௌத்த வழிபாட்டிடங்களிலோ தீபங்கள் ஏற்றுவதைத் தடுத்து இவ்வாறு நடந்து கொள்வார்களா?. ஆட்சியாளர்கள் காட்டும் சிறுபான்மையின மக்கள் மீதான அடக்குமுறையும், பெரும்பான்மையின மேலாதிக்க எண்ணமுமே தமிழ் மக்கள் வாழிடங்களில் அராஜக அநாகரிகச் செயல்களைச் செய்வதற்குப் பொலிஸாருக்கு மனத் துணிவைக் கொடுத்திருக்கிறது.

காலங்காலமாக பின்பற்றப்படும் மத நிகழ்வு என்று தெரிந்தும், ஆட்சியாளர்களை குஷிப்படுத்துவதற்காக இவ்வாறு அநாகரிகமாக காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்ளும் பொலிஸாரின் செயல் ஒரு மேலாதிக்க மனநோய் வெளிப்பாடே. இவ்வாறானவர்கள் சட்டத்தின்பால் நாகரிகமாகச் செயற்படுவார்கள் என்று நினைத்தும் பார்க்க முடியாது. மாவீரர் நினைவாக ஏற்றப்படும் ஈகைச்சுடருக்கும், கார்த்திகை தீபத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் தடை போடும் பொலிஸாரின் செயலை வர்ணிக்க, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சொல் வழக்கு இருக்கின்றது, நக்குகிற நாய்க்கு செக்கென்ன? சிவலிங்கம் என்ன?

இலங்கைக்கே உரித்தான

# மூலிகைகளை பாதுகாக்க கூட்டு வேலைத்திட்டம்



கொழும்பு,நவ.30

இலங்கைக்கே உரித்தான மருத்துவ மூலிகைகளைப் பேணிக்காக்கும், கூட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று சுதேச மருத்துவத்துவத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இதற்குரிய பூர்வாங்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொவிட்-19 பெருந்தொற்றால் உருவான நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப் படுத்தக்கூடிய, சுதேச மருத்துவ மூலிகைகள் பற்றி ஆராயப்படுகிறது. இதற்காக தேசியமட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளின் பின்னர் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். விதந்துரைகளுக்கு அமைவாக, கொவிட் சிகிச்சைக்காக உள்நாட்டு மருந்து வகைகளைப் பயன்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-இ)

## மஹர சிறைச்சாலையில் பாகிஸ்தான் கைதி சாவு

கொழும்பு,நவ.30

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கைதியொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த கைதி நீண்டகாலமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். ராகமவில் அமைந்துள்ள கொழும்பு வடக்கு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்று சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

மஹர சிறைச்சாலையில் ஒரு வார காலத்துக்குப் பதிவான இரண்டாவது உயிரிழப்பு சம்பவம் இதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 82 வயதான கைதியொருவர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (சு-இ)

ஒன்லைன் கற்றலுக்காக

## 60 அடி உயரத்துக்கு ஏறும் மாணவர்கள்

கொழும்பு,நவ.30

நவத்தேகம - மொரகஹாவெவ கிராமத்து மாணவர்கள், தினமும் 60 அடி உயரமான நீர்த் தாங்கி மேல் ஏறி நின்றே ஒன்லைன் கல்வியைக் கற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவல் நிலையை யடுத்து, மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் ஒன்லைன் முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஒன்லைன் கல்வியைக் கற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், இணைய வழிக் கற்கையில் நகவத்தேகம மாணவர்கள் எதிர்நோக்கும் சவால் இவ்வாறு அமைந்துள்ளது. நீர்த் தாங்கி மேல் ஏறினால் மாத்திரமே அலைபேசிகளுக்கு நெட்வேர்க் கிடைக்கிறது என்று கிராமத்து மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (சு - இ)

## மின்சார நிலுவை செலுத்தப்படாததால் வவுனியா பேருந்து நிலையம் இருளில்

வவுனியா, நவ. 30

வவுனியா பழைய பேருந்து நிலையம் கடந்த சில தினங்களாக இருளில் மூழ்கியுள்ளது. மின்சார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய நிலுவைப்பணம் செலுத்தாமை, மின்மாற்றியில் ஏற்பட்டுள்ள சேதம் என்பன காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நகர சபையினர் தெரிவித்த தாவது:

மின்மாற்றியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதனை உடனடியாக செயற்படுத்த முடியவில்லை. அத்துடன் மின்சாரசபைக்கு செலுத்தவேண்டிய நிலுவைப் பணமும் செலுத்தப்படவில்லை இதனை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை நகரசபையினால் எடுக்கப்பட்டுள்ளது - என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் எமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர சபையின் கவனத்துக்கு விடயம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. அவர்களுடன் இணைந்து இதனை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று நகர சபையினர் தெரிவித்தனர். (ம)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
“அடர்ந்த காட்டின் நடுவில் ஏற்படக்கூடிய அபாயம், சனநெருக்கமுள்ள நகரத்தின் தெருவைக் கடக்கும் ஒரு பாதசாரிக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை விடக் குறைவானதாகவே இருக்கும் என்று அடித்துச் சொல்லலாம்.” - ஹென்னத் அன்டர்சன்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 54 குளங்கள் சீரமைக்கப்படுமா?

**முல்லைத்தீவு, நவ. 30**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் வாரி சௌபாக்கிய திட்டத்தின் கீழ் 54 குளங்களைச் சீரமைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்தார்.**

கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரி சௌபாக்கிய திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் சீரமைக்கப்பட வேண்டிய தேவையுள்ள குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளன. துறைசார் அதிகாரிகள் மற்றும் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 54 குளங்கள் சீரமைப்புக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (ம-19)



புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் நான்கு பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 2 லட்சத்து 86ஆயிரம் ரூபா செலவில் கிணறு அமைத்து வழங்கப்பட்டது. சுசீலன் பௌண்டேசனின் திட்டத்தின் ஊடாக சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தின் நிதி அனுசரணையில் இந்த உதவி வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-222)

## ஆசிரியர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, நவ.30

பளை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இவ்வாண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அவருடன் பிரதிக்கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ப-222)



## சுகாதார சாரதிகளுக்கு முகக்கவசம் கையளிப்பு



யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் கடமையாற்றும் சாரதிகளுக்கு, முகக்கவசம் மற்றும் தொற்று நீக்கல் திரவம் ஆகியன வழங்கப்பட்டன.

கியூ மெடிக்கா தன்னார்வ தொண்டு நிறுவனத்தால், சுகாதார பணிமனை நிர்வாகத்தினரிடம் இவை கையளிக்கப்பட்டன.

அம்புலன்ஸ் மற்றும் இதர வாகன சாரதிகளுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் மற்றும் திட்டப் பணிப்பாளர் மருத்துவர் மோகன் மற்றும் தனியார் தொண்டு நிறுவன உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இவை பகிர்தளிக்கப்பட்டன. (க-20)

## சின்ன வெங்காயத்தின் விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.குடாநாட்டில் சின்ன வெங்கத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சந்தைகளுக்கு போதியளவு வெங்காயம் வந்து சேராததால் தான் அவற்றின் விலை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஒரு கிலோ 220 ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயத்தின் விலை தற்போது கிலோ 270 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதேவேளை பெரிய வெங்காயத்தின் இறக்குமதி குறைந்து காணப்படுவதால் அவற்றின் விலையும் கிலோ 180 ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த வெங்காய விலை அதிகரிப்பால் சின்ன வெங்காயத்துக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது சின்ன வெங்காயத்தின் நடுகைக் காலம் ஆரம்பிக்கப்பட்டும் உள்ளது. யாழ்.குடாநாட்டில் இந்தக் காலபோகத்தின் போது கூடுதலான செய்கையாளர்கள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர். தற்போது மழைகாலம் என்பதால் கூடுதலாக மேட்டு நிலங்களிலேயே அதிகமான செய்கையாளர்கள் இந்த சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடவுள்ளனர் (ப- 17)

## 6 லட்சம் ரூபா வீடுகளுக்கு தென்மராட்சியில் அடிக்கல்

கொடிகாமம், நவ. 30

தென்மராட்சியில் 8 குடும்பங்களுக்கு வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் அவற்றுக்கான காசோலை வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' எனும் கிராமத்துக்கு ஒரு வீட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வீடு வழங்கப்பட்டது.

வரணி, மிருசுவில், கரம்பகம், எழுதுமட்டுவாழ், மட்டுவில், சாவகச்சேரி நகர், நுணாவில் மற்றும் அல்லாரை ஆகிய பிரிவுகளில் தலா ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளுக்கான அடிக்கற்கள் நடும் நிகழ்வு நடைபெற்றது.

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் ச.இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தி.தங்கவேலு மற்றும் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க. வேலாயுதபிள்ளை ஆகியோர் அடிக்கல் நட்டனர்.

நிகழ்வில் தொழில்நுட்ப அலுவலர் ராஜரட்ணம் ஜெரோசிகா பொருளாதார அபிவிருத்தி அலுவலர் சிறீஸ்காந்தா காயத்திரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (து-159,9)



## பருத்தித்துறை கோட்ட அதிபர்களுக்குச் செயலமர்வு



பருத்தித்துறை, நவ. 30

பருத்தித்துறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்கான செயலமர்வு கோட்டக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் சுகாதார மேம்பாட்டுக்கான நடத்தை மாற்றம், சுகாதாரக் கல்வி நுட்பங்கள், பாடசாலை சுகாதார மேம்பாட்டின் உத்திகள், பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையின் முக்கியத்துவம் மற்றும் கொரோனா கட்டுப்பாடு பற்றிய கருத்துரைகள் என்பன படவிளக்கங்களுடன் வழங்கப்பட்டன.

கோட்டக்கல்வி அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக தாய்சேய் நல மருத்துவ அதிகாரி நித்யானந்தா, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிந்திகா, சுகாதாரக் கல்வி அலுவலர் ஜெயபாலன், பருத்தித்துறை பொதுச் சுகாதாரபப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் ஆகியோர் பங்குபற்றினர். (து-9)

## திட்டமிடப்படாத சீரமைப்புப் பணி: சகதியானது வீதி: மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், நவ. 30

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச சபையின் ஜே/ 326 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திட்டமிடப்படாத வகையில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணியால் வீதி சகதியாக மாறியுள்ளது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதியம் இந்த வீதிச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. நீர் வழிந்தோடும் குழாய்கள் வைக்கப்படாமல் இந்தச் சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உரிய கண்காணிப்பாளர்கள் நெறியாளர்கள் இல்லாமல் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

திட்டமிடப்படாத இந்த அபிவிருத்திக்கு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டதை அடுத்து கிண்டப்பட்ட வீதி மீண்டும் மூடப்பட்டு அபிவிருத்திப் பணிகள் கைவிடப்பட்டன. அதன் பின்னர் பெய்த கடும் மழை வீதியை சகதியாக மாற்றியுள்ளது. (ம-159)



# நிறுத்தியுள்ள நியமனத்தை மீளவும் வழங்கவேண்டும்

## வெளிநாட்டுக் கல்வி நிலையங்களின் பட்டதாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 30

**அரசு தேர்தலுக்கு முன்னர் வழங்கியிருந்த நியமனத்தை மீள்பரிசீலனைசெய்து, நிறுத்தியுள்ள நியமனத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்று இலங்கை வெளிநாட்டு கல்வி நிறுவனங்களின் பட்டதாரிகள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

திருகோணமலை - கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் ஒன்றியத்தினர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தனர்.

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டதாரிகளுக்கு அரசு நியமனக் கடிதங்கள் அனுப்பியிருந்தது. ஆனாலும் தேர்தல் காலங்களில் நியமனம் வழங்க முடியாது என்று கூறி வழங்கப்பட்டிருந்த நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டன.

இதேவேளை, பின்னர் வழங்கப்பட்ட நியமனத்தில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பல தடவைகள் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்று பேசிய போதிலும் தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் என்றும், தங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நியமனத்தை பரிசீலனை செய்து நிரந்தர நியமனங்களை வழங்க வேண்டும் என்றும் இவ்விட யம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (து)

# குப்பைகள் அகற்றலில் வவுனியாவில் தாமதம் ஏன்?

## மக்கள் விசனம்



வவுனியா, நவ. 30

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் பல நாள்களாக வீதியோரங்களில் (கதிரேசு வீதி, குருமன்காடு, மன்னார் வீதி ) காணப்படும் குப்பைகள் அகற்றப்படாமையால் அந்தப் பகுதிகள் அலங்கோலமாகக் காணப்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரசபையினரின் குப்பைகள் அகற்றும் பணிகள் தினசரி முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் வீதியோரங்களில் காணப்படும் குப்பைகளை நகர சபையினர் அகற்றுவதில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி வவுனியா நகரசபை தவிசாளரிடம் கேட்டபோது, நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் சிரமதான பணிகள் இடம்பெற்று வருகின்றமையால் ஏனைய பகுதிகளில் குப்பைகளை அகற்றுவதில் சிறு தடங்கல் ஏற்பட்டுள்ளது. தேங்கிக் கிடக்கும் குப்பைகளையும் மிக விரைவில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (து-18)

# பொது இடத்துக்கு அழைத்து பி.சி.ஆர். மாதிரிகள் பெறுகை

## பிரதேச மக்கள் விசனம்

முல்லைத்தீவு, நவ. 30

சுய தனிமைப்படுத்தலில் இருந்த மக்களை பொது இடத்துக்கு அழைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார சேவை பணிமனையினரால் குறித்த பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் போத்தல் தண்ணீர் விநியோகஸ்தர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் சுய தனிமைப்படுத்தலில் இருந்தவர்களுக்கே நேற்று மாதிரிகள் பெறப்பட்டன.

முறுகண்டி மற்றும் செல்வபுரம் பகுதிகளில் வர்த்தக நிலையங்களை நடத்திவந்த வர்த்தகர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று அவர்களிடம் மாதிரிகள் பெறப்பட்டன.

ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு சென்று சுகாதார தரப்பினர் மாதிரிகளைப் பெற்றுவந்த நிலையில், இங்குள்ளவர்களை மாத்திரம் முறுகண்டி - வசந்த நகர் பொதுநோக்கு மண்டபத்துக்கு அழைத்து மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. குறித்த சம்பவம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த அழைக்கப்பட்ட வர்த்தகர்கள் 2 மணிநேரங்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தரித்து நின்றுள்ளனர். ஒவ்வொருவராக அழைத்து மாதிரிகள் பெறப்பட்டன.

இது குறித்து அங்கு வந்த மருத்துவக் குழுவினரிடம் கேட்டபோது, இவர்களிடமிருந்து தனித்தனியாக மாதிரிகளை பெறுவதற்கு வாகனம் இல்லை. இவர்களின் நலன்கருதியே இந்த இடத்தைத் தெரிவுசெய்தோம் என்றும் தெரிவித்தனர். (து)





# மல்லிகைத் தீவில் பனம் விதைகள் நடுகை

முல்லைத்தீவு, நவ. 30

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மல்லிகைத் தீவு கூட்டுறவு பாற்பண்ணையின் சுற்றுப்புற பகுதியில் பனை விதைகள் நடுகை அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் கற்பகா திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த நிகழ்வு கிளிநொச்சி சமூக மேம்பாட்டு பேரவை உறுப்பினர்களின் பங்குபற்றுதலில் நடைபெற்றது.

நிகழ்வில் மருத்துவர்கள், முல்லைத்தீவு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (து-222)

# தம்புள்ள கல்வி வலய பாடசாலைகளுக்கு பூட்டு

தம்புள்ள கல்வி வலயத்துக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒரு வாரத்துக்கு பாடசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொரோனா அச்சம் அதிகரித்து வருவதனால், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் பெரும்பாலானோருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பரிசோதனை முடிவுகளில், வர்த்தகர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# நறுவிலிக்குளம் மைதான சீரமைப்பு மீள ஆரம்பிப்பு

மன்னார், நவ. 30

மன்னார் நறுவிலிக்குளம் விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சு 2017 ஆம் ஆண்டு மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் சுமார் பத்து ஏக்கர் பரப்பளவில் நீச்சல் தடாகம், ஓடுதளம் மற்றும் பார்வையாளர் அரங்கம் உட்பட நவீன வசதிகள் கொண்ட விளையாட்டுமைதானம் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஓடுதளம் பகுதியில் பழங்கால தொல்பொருள் சான்றுகள் வெளிவந்தன. அதனால் தொல்பொருள் திணைக்களம் விளையாட்டு மைதானம் கட்டுமான பணிகளை இடைநிறுத்தியது.



தொல்பொருள் திணைக்களம் அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொண்டது. பின்னர் மைதான வேலைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது.

சில நிர்வாக சிக்கல் காரணமாக இவ்வளவு காலமும் தடைப்பட்டிருந்த நறுவிலிக்குளம் விளையாட்டு மைதான கட்டுமான பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஓடுதளம், பார்வையாளர் அரங்கம், நீச்சல் தடாகம் போன்றவை தனித்தனி ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (து-213)

# மன்னாரில் 42 இளையோருக்கு முதற்கட்ட பயிற்சிகள் நிறைவு

மன்னார், நவ. 30
ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்கு என்று மன்னார் மாவட்டத்தில் முதற் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 834 பேரில் முதற்கட்டமாக 42 இளையோருக்கு இரண்டு வாரங்கள் மன்னார் இளைஞர் படையணி முகாமில் தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.



பயிற்சியின் இறுதி நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் இளைஞர் படையணி முகாமில் நடைபெற்றது. அவர்கள் முன்னிலையில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த பயிற்சி நெறியில் பல்வேறு பாடங்களைக் கற்றுக்கொண்டிருப்பீர்கள். எவ்வித பிரச்சினைகளும் இன்றி சகிப்புத்தன்மையை ஏற்றுக்கொண்டு குறித்த பயிற்சி நெறியை பூர்த்திசெய்துள்ளீர்கள். அனைவருடைய திறமைகளையும் வெளிக் கொண்டு வருவதற்கு இங்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

நீங்கள் சமூகத்திலும், திணைக்களத்திலும், குடும்பங்களிலும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பாக பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பெற்றுக்கொண்ட பயிற்சியை நீங்கள் தொடர்ந்து நடைமுறைப் படுத்த வேண்டும். ஆறு மாதங்கள் பயிற்சியில் தற்போது இரண்டு வாரங்கள் பயிற்சி மட்டுமே உங்களுக்கு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

மிகுதி பயிற்சிகள் தேசிய பயிலுநர் அதிகாரசபை ஊடாகவும், ஏனைய திணைக்களங்கள் ஊடாகவும் வழங்கப்படும் என்று செயலர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வைத் தொடர்ந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை முகாமில் இளையோர் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர். (த-56)

முல்லைத்தீவு விசுவமடுவில்

# தனிமையை மீறுகின்ற குடும்பங்களால் அச்சம்

முல்லைத்தீவு, நவ. 30

**முல்லைத்தீவில் தனிமைப்படுத்தல் விதியை மீறும் குடும்பங்களால் ஏனையவர்கள் அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப்பகுதியில் வெளி மாவட்டங்களுக்கு வேலைக்காகச் சென்று வருபவர்கள் அதிகம் காணப்படுகின்றனர். விசுவமடு மாணிக்கபுரம் பகுதி யில் சில குடும்பங்கள் வறுமை காரணமாக சட்டவிரோத மதுபான விற்பனைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வீடுகளில் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்களால் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. எனினும், அவர்களின் வீடுகளில் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது என்றும் குற்றஞ்சாட் டப்படுகின்றது. அதனால், அவர்களின் வீடுகளுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர்களால் கிராமத்தில் வசிக்கும் ஏனைய குடும்பங்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றன என்றும் அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கிராம அலுவலர், பிரதேச செயலர், பொதுச் சுகாதார பரிசோதர்கள் மற்றும் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியும் நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 14 நாள்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை எந்த அரச நிறுவனங்களும் கண்டுகொள்ளாத நிலையில் சட்டவிரோத மதுபானங்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் இவ்வாறான குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன என்றும் கிராம மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர். (த-19)

## இலங்கையர்கள் அறுவர் மதுரை சிறைச்சாலையில்

டில்லி,நவ.30
இந்தியாவின் தூத்துக்குடி கடற்பகுதியில் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்ட இலங்கையர்கள் அறுவர், மதுரை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி கடல் எல்லையில் இந்தியக் கடலோர பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இலங்கையர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி - வாழைத்தீவு கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற படகை கடலோர பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, படகில் 100 கிலோ கிராம் ஹெரோய்ன் மற்றும் கைத்துப்பாக்கிகளை தமிழக கடலோர பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களை தூத்துக்குடி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, அவர்களை 6 நாள்கள் மதுரை மத்திய சிறையில் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## பிளாஸ்ரிக் கழிவுகள் வீதிப் புனரமைப்புக்கு

*அதிகாரிகள் திட்டம்*

கொழும்பு,நவ.30
கழித்தொதுக்கப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை, நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளில் மூலப் பொருளாகப் பயன்படுத்தும் திட்டம் வகுக்கப்படவுள்ளது.

இந்தப் பிளாஸ்ரிக் கழிவுகள் நவீன தொழில்நுட்பத்தின் மூலம், பிளாஸ்ரிக் கலந்த கொங்கிரீட்டாக மாற்றப்படும். வீதிகளுக்குக் காப்பெற் இடுகையில், இந்தக் கொங்கிரீட் கலவையைப் பயன்படுத்துவதற்கு, வீதி அபிவிருத்தி அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதனை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையும், திண்மக்கழிவு முகாமைத்துவ அதிகாரசபையும் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



## தங்கத்தின் விலை வீழ்ச்சி

கொழும்பு,நவ.30
உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய கடந்த வாரத்தில் 4.5 வீதம் வரை தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளது.

தங்கம் ஒரு அவுன்ஸின் விலை ஆயிரத்து 800 அமெரிக்க டொலர் வரை குறைவடைந்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதத்தின் பின்னர், தங்கத்தின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. ஓகஸ்ட் மாதத்தில் அவுன்ஸின் தங்கத்தின் விலை 2 ஆயிரத்து 75 அமெரிக்க டொலர் வரை அதிகரித்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## வெளிநாடுகளில் குற்றம் புரியும் இலங்கையர்களுக்குத் தண்டனை

வெளிநாடுகளில் குற்றங்களில் ஈடுபடும் இலங்கையர்களுக்கு, இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஜப்பான் யுவதியொருவரை இலங்கையர் ஒருவர் கடத்தி வந்துள்ளமை தொடர்பாக, அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு தண்டனைச் சட்ட திருத்தத்துக்கமைய, வெளிநாடுகளில் இலங்கையர்கள் செய்யும் குற்றங்கள், இலங்கையின் சட்டத்துக்கமைய தவறெனின், குற்றமிழைத்த இலங்கையர்களுக்கு எதிராக இலங்கையில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



கொரோனாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்காக மானிப்பாய் லியோ கழகம் தனது தாய் கழகமான லயன்ஸ் கழகத்துடன் இணைந்து சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பணிமனைக்கு ஒருதொகுதி முகக்கவசம் மற்றும் தொற்று நீக்கும் திரவம் என்பவற்றைக் கையளித்தன. (ம)

## டெங்கு ஒழிப்பு பிரிவினர் களத்தில்

கொழும்பு,நவ.30
பேருவளை மற்றும் களுத்துறை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில், டெங்கு ஒழிப்பு பிரிவினர் கொரோனாத் தொற்றுக்கான சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தப் பகுதிகளில் சுகாதாரப் பரிசோதகர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தால், அவர்களுக்கு பதிலாக டெங்கு ஒழிப்பு பிரிவினர் சேவைகளை வழங்கி வருகின்றனர்.

அதனடிப்படையில் கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை இவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் உதவியுடன் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# திறக்கப்பட்ட நிறுவனங்களை கண்காணிப்பது அவசியம்

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு,நவ.30**

**பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில், தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் திறக்கப்பட்டுள்ளதால், அங்கு கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே அங்கு கண்காணிப்புக்களைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

குறிப்பிட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமாயின், அந்தப் பிரதேசங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்று, சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் கொரோனா அவதானம் அதிகமுள்ள இடங்களிலிருந்து, குறித்த நிறுவனங்களுக்குப் பணியாளர்கள் வந்து செல்கின்றனர்.

குறிப்பாக கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் கட்டுப்பாடின்றி தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது.

எனவே திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்களில் சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் தீவிர அவதானம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 5 நாள்களேயான சிசுவுக்கு தொற்று



கொழும்பு, நவ.30

இலங்கையில் கடந்த 5 நாள்களுக்கு முன்னர் பிறந்த குழந்தை ஒன்று கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அட்டுளுகம பிரதேசத்தைச் சேர்ந்த தாய் ஒருவருக்கு கடந்த வாரம் 21ஆம் திகதி குழந்தை ஒன்று பிறந்துள்ள நிலையில் குழந்தையை பிரசவித்த தாய்க்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து குறித்த தாய் பிரசவித்த குழந்தைக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குழந்தைக்கும் தொற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கண்காட்சியும் விற்பனையும்

சுன்னாகம், நவ.30

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'எங்கட புத்தகங்கள்' என்ற தலைப்பில் கண்காட்சியும், விற்பனையும் சுன்னாகம் பொதுநூலகத்தில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. தொடர்ந்து டிசெம்பர் 7 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் ஈழத்திலும், புலத்திலும் வாழும் 300க்கும் அதிகமான எழுத்தாளர்களின் 500க்கும் அதிகமான புத்தகங்களின், 3 ஆயிரம் பிரதிகள் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படவுள்ளன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நெருக்கடி இன்றி வாசகர்கள் புத்தகங்களைப் பார்த்து, வாசித்து கொள்வனவு செய்வதற்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# பாலியல் லஞ்சம் கோரினார் மொட்டுக் கட்சி உறுப்பினர்

## பிரபல நடிகை குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.30

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் கோரிய தன்னிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர் ஒருவர் பாலியல் இலஞ்சம் கோரினார் என்று பிரபல சிங்கள நடிகை மதுஷா ராமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடந்த ஊடக சந்திப்பில் அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் தெரிவித்த அவர்; தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இருக்கின்றது எனக் கூறிவரும் கீதா குமாரசிங்க அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கே இருந்தார். என்னிடம் பாலியல் இலஞ்சம் கோரியவர்களுக்கு மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் மிகச்சரியான பாடம் புகட்டியுள்ளனர் - என்றார். (ப)

## நுணாவில் பகுதியில்

# தளபாட வியாபாரிகள் 10 பேர் தனிமையில்

சாவகச்சேரி, நவ.30

தளபாட வியாபாரத்துக்காக மொரட்டுவப் பகுதியிலிருந்து வந்த பத்துப் பேர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் நுணாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த 10 பேர் மூன்று வாகனங்களில் சாவகச்சேரிக்கு வந்து நுணாவிலில் தங்கியிருந்து தளபாடங்களை கிராமம் கிராமமாக நடந்து சென்று விற்பனை செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களின் வருகை தொடர்பாக பொதுமக்கள் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருக்கு அறிவித்தனர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சென்ற சுகாதாரப் பகுதியினர் அங்கு காணப்பட்ட பத்துப் பேரையும் தனிமைப்படுத்தினர்.

தென்பகுதியில் கொரோனாவின் பரம்பல் அதிகரித்துள்ள நிலையில் அங்கிருந்து பொருள்களைக்கொண்டு வருபவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்தவேண்டாமென சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## தியவன்ன ஓயாவில் சடலம் மீட்பு

கொழும்பு. நவ.30

பத்தரமுல்ல - தியவன்ன ஓயாவில், அடையாளம் காணப்படாத நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# பி.சி.ஆருக்கான கட்டணங்கள்; அதிகாரிகள் கலந்துரையாடல்

கொழும்பு, நவ.30

பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் மற்றும் அத்தகைய செலவுகளை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தனியார் துறை மருத்துவமனை, மற்றும் ஆய்வக அதிகாரிகளுடன் கடந்த புதன்கிழமை கொவிட் - 19 வைரஸ் பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தில் சிறப்பு கலந்துரையாடல் இடம்பெற்றது.

கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் மருத்துவ நிபுணரும் பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான மருத்துவர் அசேல குணவர்தன ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில். தனியார் துறையில் பி.சி.ஆர். சோதனைகள் மற்றும் மாறுபட்ட கட்டணங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. நாடு சுகாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இவ்வேளையில் இரகசிய நடைமுறைகளை நாடாமல் பொதுவான நடைமுறைகளைச் செயற்படுத்துமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது. பணம் செலுத்தும் அடிப்படையில் தனியார் மட்டத்தில் இத்தகைய சேவையைப் பெற யாராவது ஆர்வமாக இருந்தால், அத்தகைய சோதனைகளை ஒரு முதன்மை தேசியத் தேவையாகக் கருதிச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. (ப)



# திருமுறிகண்டியில் தொற்று நீக்கம்!

முல்லைத்தீவு, நவ. 30

முல்லைத்தீவு திருமுறிகண்டி பகுதியில் பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகள் அனைத்தும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தொற்று நீக்கம் செய்யப்பட்டன.

கிளிநொச்சி பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து அவர்கள் நடமாடியிருக்கலாம் என்று கருதப்படும் பகுதிகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் தொற்று நீக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திருமுறிகண்டிப் பகுதியில் நேற்று தொற்றுநீக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம)

# சுகாதார நடைமுறை இறுக்கம்; கொடிமரம் ஏற்றுவதில் சிரமம்

சாவகச்சேரி, நவ. 30

சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம், ஆலயத்துக்கு வந்த அடியவர்களை பொலிஸார் மட்டுப்படுத்தி வெளியேற்றியதால் கொடிமரம் ஏற்றுவதற்கு ஆலய நிர்வாகத்தினர் சிரமங்களை எதிர்நோக்கினர்.

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆலயத்தின் பங்குத் தந்தை பொலிஸ் அதிகாரியுடன் கலந்துரையாடியதையடுத்து கொடிமரம் ஏற்றுவதற்கு மட்டும் வெளியில் நின்ற அடியார்களை உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் கொடிமரம் ஏற்றப்பட்டது. (ப-9)

# தனிமைப்படுத்தப்பட்டோர் குற்றவாளிகள் அல்லர்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவிப்பு

கொடிகாமம், நவ.30

தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்கள் எந்த விதத்திலும் சமூகத்தில் குற்றவாளிகள் அல்லர் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று பருத்தித் துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா சம்பந்தமாக தற்செயலாக தொற்றுகின்ற வாய்ப்பு ஏற்படலாமெனக் கருதுகின்றவர்கள் இவ்வாறு சமூகத்திலே வீடுகளிலேயே 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களைச் சரியான விதத்தில் அவதானித்து அவர்களுக்கு நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றதா எனக் கண்காணித்து அல்லது அவர்களிடமிருந்து குடும்பத்தினர்களுக்கோ அல்லது சமூகத்தவர்களுக்கோ அயலவர்களுக்கோ இந்த நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

அவர்கள் எந்தவிதத்திலும் ஒரு குற்றவாளிகள் என்றோ அல்லது சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்றோ நாங்கள் நினைக்கக்கூடாது. அவர்களுக்கான உளரீதியான மேம்பாட்டு மற்றும் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்குத் தேவையான உதவிகளை நாங்கள் செய்வதற்காக அயலிலுள்ளவர்களும் முன்வர வேண்டும். அயலிலுள்ளவர்கள் அவர்களை வெறுக்காது ஒதுக்காது அவர்களுடன் கலவரங்களில் ஈடுபடாமல் முக்கியமாக அவர்களுக்குத் தேவையானவற்றை அறிந்து உதவ முன்வர வேண்டும் என்றார். (ப-159)

# அரச திணைக்களங்களாலேயே திருமலையில் காணிப் பிணக்கு

## எம்.பி. இம்ரான் மகரூப் சுட்டிக்காட்டு



திருமலை, நவ. 30

திருகோணமலை மாவட்ட காணிப் பிரச்சினைகளுக்கு வன விலங்குத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களமே காரணம் என திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் பயிர் செய்யும் காணிகளில், மக்களின் உறுதிக் காணிகளில் திடீரென வனவிலங்குகள் திணைக்களம், தொல்பொருள்திணைக்களத்தினர் வந்து இது தமது திணைக்களங்களுக்குச் சொந்தமான காணி என எல்லையிடுகின்றனர். இது தொடர்பாக அந்த பிரதேச செயலாளருக்கோ காணி உத்தியோகத்தருக்கோ எதுவித தகவலும் தெரியாது எனக் கூறுகின்றனர். ஒருவர் பரம்பரை பரம்பரையாக பராமரிக்கும், பயிர்செய்யும் உறுதிக் காணி எப்படி இவர்களுக்குச் சொந்தமாக முடியும். ஆகவே இதற்குரிய தீர்வை அமைச்சர் முன்வைக்க வேண்டும்.

இது தவிர புடவைக்காடு முஸ்லிம் வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி மணல் அகழ இல்மனைட் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது . எந்த அடிப்படையில் இந்தக் காணி மணல் அகழ்வுக்கு வழங்கப்பட்டது. எமது மாவட்டத்தில் இன்னொரு பிரச்சினையாகக் காணப்படுவது பிரதேச செயலகங்களுக்குரிய எல்லைகள் இன்னமும் உரியமுறையில் அடையாளப்படுத்தப்படவில்லை.

அதனால் சில பிரதேச செயலகக் காணிகள் இன்னொரு பிரதேச செயலாகத்தால் அத்துமீறிப் பிடிக்கும் நிலை காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் இன்னமும் மேய்ச்சல் தரை இல்லாததால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே மேய்ச்சல் தரைக்கான இடத்தையும் அடையாளப்படுத்த வேண்டும் - என்றார். (ப)

# கிழக்கு முனையம் இந்தியாவுக்கா? அஜித்தின் வருகையில் சந்தேகமே

## அலவத்துவல எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, நவ.30

கொழும்பு துறை முகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கப்போவதில்லை என்று அரசாங்கம் கூறினாலும், இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் வருகையில் எமக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவே அறியப்படுகிறது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் கொவிட் அச்சுறுத்தல் தீவிரமடைந்துள்ள நிலையில் சீனா, அமெரிக்கா, இந்தியா என ஒவ்வொரு பிரிவினரும் நாட்டுக்கு வர வேண்டியதன் அவசியம் என்ன? அவர்களுடன் இலங்கை அரசாங்கம் எவ்வகையான பேச்சுக்களில் ஈடுபடுகிறது? அரசாங்கத்தின் பிழையான வெளிநாட்டுக் கொள்கைகளால் நாடு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சீனா, இந்தியா, அமெரிக்கா என வெளிநாட்டு அழுத்தங்களின் மத்தியில் இலங்கை சிக்கியுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது. இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரின் வருகையில் எமக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் அரசாங்கம் வெவ்வேறு கருத்துக்களைக் கூறினாலும், மறுபுறுத்தில் அதனை இந்தியாவுக்கு வழங்குவதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கத்தினருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கிய வாக்குறுதிகளை மீறி தற்போது அவர்களின் குரல் அடக்கப்படுகிறது என்றார். (ப)

# கடத்தப்படவிருந்த ஒருதொகுதி மஞ்சள் மீட்பு

புத்தளம், நவ.30

புத்தளம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆயிரத்து 67 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.சந்தேகத்தில் 37 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள், சட்டவிரோத கடத்தலுக்கு ஏதுவாக 25 பொதிகளில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது என கடற்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)

# தொற்றாளர் உள்ள வீட்டிலுள்ள மாணவர்களுக்கு அறிவுறுத்தல்



கொழும்பு, நவ.30

ஒரு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பத்தை சேர்ந்த மற்றும் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட வீடுகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிவியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது. பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை கிடைப்பதற்கு முன்னர் மாணவன் ஒருவர் பாடசாலைக்கு வந்தமையால் பெற்றோர் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

உயர்தரத்தில கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை இவ்வாறு பாடசாலைக்கு வந்தார் என்று கூறப்படுகின்றது.

மாணவர் வகுப்பறையில் இருந்தநிலையில் அவர் ஒரு கொடவத்தை பிரதேசத்தில் இருந்து வந்தார் என்று தெரிய வந்ததை அடுத்து, மீண்டும் அந்த மாணவரை வீட்டுக்கு அனுப்புவதற்கு அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அறிவியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# களமாடும் தாய்மாருக்கு உலர் உணவுப் பொதிகள்

வவுனியா, நவ.30

வவுனியா மாவட்டத்தில் தொய்வுறாமல் ஆயிரத்து 378 நாள்கள் கடந்தும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கேட்டு சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கு கடந்த வியாழக்கிழமை உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. 64 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான 64 உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ப)



# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்க்கும் விஷயங்கள் வெற்றியடையும் நாள். சுப நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெரிய பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்ட கால நோயின் தீவிரம் குறையும்.

**இடபம்:** புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் நாள். குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு நிம்மதி கிடைக்கும். சுபச்செலவு உண்டு.

**மிதுனம்:** அக்கம் பக்கத்தினரை அனுசரித்து போக வேண்டிய நாள். அலுவலகத்தில் உங்களை யாருடனும் ஒப்பிட வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் காரணமாக லாபம் குறையும்.

**கடகம்:** வாகன வகையில் ஆதாயம் உண்டாகும் நாள். மாமன் மூலம் மன நிறைவு பெறுவீர்கள். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிடைக்கும். பணியாளர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை அமையும்.

**சிம்மம்:** சிரமம் ஏற்பட்டு மீளும் நாள். செய்யும் முயற்சிகளில் முன்னேற்றம் அடைவீர்கள். விசா தொடர்பான நல்ல செய்தி வரும். குடும்பத்தில் புதுநபர் வருகை உண்டு.

**கன்னி:** காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான நாள். மனதில் நிம்மதி கூடும். தம்பதியர் ஒற்றுமை நல்ல முறையில் இருக்கும். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றும் நாள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். பெண்களுக்கு சிறிய மனவருத்தம் ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்கும் நாள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வழக்குகளின் போக்கு சாதகமாக இருக்கும். வியாபாரத்தில் தொட்டது துலங்கும்.

**தனுசு:** நல்லவர்கள் யார் என்பதை கண்டறியும் நாள். பணவரவு சிறிதளவே திருப்தி தரும். சக பணியாளர்களின் விமர்சனங்களைப் பொருட்படுத்த வேண்டாம்.

**மகரம்:** பழைய சிக்கலை தீர்க்கும் நாள். பெண்களுக்குப் புதுப் பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் வேலையாள்களை மாற்றுவீர்கள். பணியாளர்கள் நினைத்தது நிறைவேறும்.

**கும்பம்:** பழைய ஏமாற்றங்களை மறக்கும் நாள். தொழிலில் ஈடுபாடு அதிகரிக்கும். தந்தை வழி உறவி னர்களால் ஏற்பட்ட சிரமம் தீரும்.

**மீனம்:** குழந்தைகளால் மகிழ்ச்சியடையும் நாள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில வேலைகளை முடிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரம் செழிக்கும்.

# வடக்கு மீனவர்கள் ஊடாக கொரோனா வந்திருக்கும்!

*நிரோஷன் பெரேரா எம்.பி. கூறுகிறார்*

**கொழும்பு, நவ.30**

**இந்திய மீனவர்களின் மூலமாக வடக்கு மீனவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றி, அதன் மூலமாகவே கொரோனா மூன்றாம் அலை இலங்கையில் உருவாகியிருக்கும் என அனுமானிக்கப்படுகின்றது.**

இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோஷன் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடற்தொழில், பெருந் தோட்டத்துறை மற்றும் காணி அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாதுகாப்பு குறித்து பேசும் அரசாங்கம் எமது கடல் எல்லையை பாதுகாக்க நடவடிக்கை வேண்டும். நாட்டில் மீன்பிடித்துறை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. கொவிட் -19 வைரஸ் பரவல் முழுமையாக மீனவர் சமூகத்தை பாதித்துள்ளது. இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லையில் மீன்பிடிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு அமைச்சர் இதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல கொரோனா மூன்றாம் அலை இலங்கையில் உருவாக, இந்திய மீனவர்கள் காரணமாக இருக்கலாம். அவர்களின் மூலமாக வடக்கு மீனவர்களுக்கு தொற்றி வந்திருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது.

பாதுகாப்பு தொடர்பாகப் பேசும் அரசாங்கம் எமது கடல் எல்லையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

நிலத்தை மட்டுமல்ல, கடல் எல்லையையும் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது கடல் வளம் சுரண்டப்படுகின்றது, மீன்வளம் சுரண்டப்படுகின்றது, போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொரோனா வைரஸ் பரவலும் ஏற்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் இந்தியாவுகோ எவருக்குமோ அஞ்சாது நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ-இ)

# நாப்கின்களுக்கு செஸ் வரி: சோடிக்கப்பட்ட கருத்துக்களே

*உண்மையில்லை என்கிறார் வர்த்தக அமைச்சர்*

பெண்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான நாப்கின்களுக்கு 15 சதவீதம் செஸ் வரி விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்கள் வெறும் சோடிக்கப்பட்ட பொய்யான கருத்துகள் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெண்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கான நாப்கின்களுக்கு இதற்கு முன்னர் நூற்றுக்கு 30 சதவீதமான வரி அறவிடப்பட்டது. இதனைத்தான் நாம் மாற்றியுள்ளோம். 15 சதவீதத்தை இறக்குமதி வரியாகவும் 15 சதவீதத்தை செஸ் வரியாகவும் மாற்றியுள்ளோம். ஒரு சதம்கூட வரியில் மாற்றம் ஏற்படவில்லை. உலகளாவிய ரீதியில் தயாரிக்கப்படும் தரத்தை விட தரம் வாய்ந்ததாகவும் மிகவும் குறைந்த விலையில் இலங்கையில் நாப்கின்களை தயாரிக்க முடியும் என்பதற்காகவுமே செஸ்வரி 15 வீதம் விதிக்கப்பட்டது. இதனை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பிரதானிகளை நாம் அமைச்சுக்கு அழைத்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

கிராமிய பிரதேசங்களுக்குக் குறைந்த விலையில் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கேள்விகள் அதிகரித்தால் முழுமையான கேள்விக்கு நாப்கின்களை தேசிய உற்பத்தியாளர்கள் மூலமே பெற்றுக்கொடுக்க முடியும் என்றார். (ந-இ)

# 60 ஆண் பணியாளர்கள் சவூதிக்குப் புறப்பட்டனர்

கொழும்பு, நவ.30

இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்கு ஆண் பணியாளர்களை அனுப்பும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை வேலைவாய்ப்புக்கான வெளிநாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. அதன்படி, 60 ஆண் பணியாளர்கள் இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவுக்கு புறப்பட் டுள்ளனர். மேலும் முதற்கட்டமாக 180 ஆண்கள் செல்லவுள்ளதுடன், இவர்கள் ஹொட்டல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணியாற்றவுள்ளனர் என பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

# கர்ப்பத்தில் இருந்த சிசுவை காவு வாங்கிய அலைச்சல்

கொழும்பு, நவ. 30

கம்பஹா, பெத்தியாகொட பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்து சென்றபோது கர்ப்பத்தில் இருந்த குழந்தையை இழந்த சோகச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த கர்ப்பிணி பெண்ணின் கணவர் மீன் வியாபாரி என்பதால் அவர் மட்டக்களப்பு தனிமைப்படுத்தும் முகாமில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்து அவரது 6 மாதகர்ப்பிணியான மனைவி உட்பட குடும்பத்தி னர் பதுளை - தியத்தலாவ இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பயண தூரம் மற்றும் பல இன்னல்களால் அவரது கர்ப்பத்தில் இருந்த குழந்தை இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)



# சீன அபிவிருத்தி வங்கியிடம் 700 மில்.கடன் பெற தீர்மானம்



**கொழும்பு, நவ.30**
**இலங்கை சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து எதிர் வரும் மாதம் 700 மில்லியன் டொலரை கடனாகப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது என்று நிதிய மைச்சு தெரிவித்துள்ளது.**

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது என அரசு முன்னர் தெரிவித்திருந்தது.
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங் களுக்குக் கடன் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த மாதம் 165 மில்லியன் டொலர் கடனுக்கு அங்கீகாரம் வழங்கி யது.
இந்நிலையில் ஏற்கனவே 4 பில் லியன் அமெரிக்க டொலர் கடனை அரசு கடந்த ஒக்ரோபரில் திருப்பிச் செலுத்தியுள்ள நிலையில், அடுத்த ஆண்டு இன்னும் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பி செலுத்த வேண்டும்.
இதேவேளை, இலங்கையின் மத் திய வங்கி பணத்தை அச்சிட்டு வருகிறது.
இது கடனைத் திருப்பிச் செலுத்து வதற்கான இருப்புக்களைச் சேக ரிப்பதை எளிதாக்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## ஒரு மில்லியன் கி.கிராம் மஞ்சள் இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி

கொழும்பு, நவ.30
சுங்க திணைக்களத்தினரால் கைப்பற்றப் பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஒரு மில் லியன் கிலோ கிராம் மஞ்சள் அடங்கிய 62 கொள்கலன்கள், இந்தியாவுக்கே மீள் ஏற் றுமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இந்தியாவிடமிருந்து அபராதத் தொகையை அறவிட்டு, அவை இந்தியாவுக்கே மீள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்கப் பணிப்பாளருமான சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.
இதேவேளை இந்தியாவிலிருந்து இலங் கைக்கு கடத்தி வரப்பட்டு, அரசுடமையாக் கப்பட்டுள்ள 30 தொன் மஞ்சளில் 10 தொன், ஆயுர்வேத உற்பத்தி கூட்டுதாபனத்தின் கோரிக்கைக்கமைய, நிதி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-இ)

## சூழல் பாதிப்பு பற்றி அறிவிக்க தனிப்பட்ட இலக்கம்

கொழும்பு, நவ.30
சுற்றுச்சூழல் பாதிப்பு; தொடர்பில் தக வல்களை வழங்க தன்னுடைய தனிப் பட்ட இலக்கத்தை வழங்கியுள்ளார் சுற்றாடல் அமைச் சர் மஹிந்த அமரவீர. அதன்படி, தனது தனிப்பட்ட தொலைபேசி இலக்கமான 070 7555666 இற்கு வட்ஸ்அப் தகவல், குறுந்தகவல் அல்லது காணொளி களை அனுப்புமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதனை விட, சுற்றாடல் அமைச்சு - 1991, மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 1981, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் - 1921 ஆகிய இலக்கங்க ளுக்கும் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கு மாறும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



## மெனிங் வர்த்தக நிலையத்தில் குலுக்கல் முறையில் தெரிவுகள்

கொழும்பு, நவ.30
பேலியகொட மெனிங் வர்த்தக நிலையத்துக்கு குலுக்கல் முறையில் வர்த்தகர்கள் தெரிவுசெய்யப்பட்டு கடை கள் வழங்கப்படும் என அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.
சில துறைகளின் அடிப்படையில் வர்த்தகர்களை வகைப் படுத்தும் வேலைத்திட்டம் வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.
இதேவேளை பேலியகொட மெனிங் வர்த்தக நிலையத்தின் கட்டடத் தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட் டாலும், இன்னமும் கட்டுமாணப் பணிகள் இடம்பெறு கின்றன என வெளியான செய்திகளில் உண்மையில் இல்லையென அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## கொரோனாவால் உயிரிழந்தோரில் 69 பேர் பெண்கள்

கொழும்பு, நவ.30
இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களில் 69 பேர் பெண்கள் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அதனை நீக்குவது பற்றி தீர்மானம் எடுக் கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (வ-இ)

## கொரோனா தொற்றாளர்கள்

### கண்டி அக்குறணையில் 71 தொற்றாளர்கள்

கண்டி, நவ.30
கண்டி மாவட்டத்தின் அக்குறணை சுகாதார வைத்திய பிரிவில் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென தெரிவிக்கப்படுகிறது.
அக்குறணை பகுதியில் மாத்திரம் 71 தொற்றாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனரென, மத் திய மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள் ளது. (ந-இ)

### குயினா தோட்டத்தில் ஒருவருக்கு தொற்று

பொகவந்தலாவை, நவ.30
பொகவந்தலாவை குயினா தோட்டத்தில் 42 வயது டைய நான்கு பிள்ளைகளின் தந்தைக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இதனால் நான்கு மாதக் குழந்தை உள்ளிட்ட 8 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, கொரோனாத் தொற் றாளர் சென்றுவந்த மதுபானசாலை, இரு சில்லறை கடைகள் ஆகியனவும் பூட்டப்பட்டுள்ளதுடன் அங்குள் ளவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

### கம்பஹாவில் 27 தொற்றாளர்

கம்பஹா மாவட்டத்தில் மேலும் 27 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதன்படி களனியில் 7 பேர், வத்தளையில் 6 பேர், தொம்பே வில் 3 பேர், நீர்கொழும்பில் 2 பேர் உட்பட 27 தொற் றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
கம்பஹா மாவட்டத்தில் இதுவரையில் 5ஆயிரத்து 211 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, 78 ஆயிரத்து 202 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந-இ)

### கண்டி தேசிய வைத்தியசாலையில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று

கண்டி தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் உள் ளிட்ட 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலையில் இது வரை 18 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். (ந-இ)

### கிழக்கில் இதுவரை 177 தொற்றாளர்கள்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 177 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், திருகோணமலை மாவட்டத்தில் 16 தொற்றாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 88 தொற்றாளர்களும் அம்பாறை பிராந் தியத்தில் 08 தொற்றாளர்களும் கல்முனை பிராந்தி யத்தில் 65 தொற்றாளர்களும் தொற்று உள்ளாகி யுள்ளனர் எனத் தெரிவித்தார். (வ-இ)

## 20 கைதிகள் விடுதலை!

மட்டக்களப்பு, நவ.30
ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமை வாக மட்டக்களப்பு சிறையிலிருந்து இருபது சிறைக்கைதிகள் நேற்றுமுன் தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கொவிட்19 நிலைமையைக் கருத்தில் கொண்டு இடநெருக்கடியைக் குறைக் கும் வகையில், இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறு குற்றங்களுக்காக சிறைவாசம் அனுபவித்து வந்த இருபது கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் அடிப் படையில் விடுதலை செய்யப்பட்டனர்.
விடுதலை செய்யப்பட்ட இருபது கைதிக ளும் ஆண் கைதிகள் என சிறைச் சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன. (ற-ரி4)

# பி.சி.ஆர். முடிவுகளின் தாமதம் கொத்தணிகளை உருவாக்கும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 30

**பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் புதிய கொத்தணிகளை உருவாக்கிவிடும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**




கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அழுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்பில் 3 பிரதான பிரச்சினைகள் உள்ளன. முதலாவது பி.சி.ஆர். பரிசோதனைகளின்அளவாகும். நாட்டில் வைரஸ் பரவல் வேகம் அதிகரித்துள்ள இந்த சந்தர்ப்பத்திலும் கூட 10 ஆயிரம் தொடக்கம் 12 ஆயிரம் வரையான பி.சி.ஆர். பரிசோதனைகளே முன்னெடுக்கப்படுகின்றன. எழுமாற்று பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். சனத்தொகைக்கு ஏற்ப விஞ்ஞானபூர்வமாக எழுமாற்று பரிசோதனைகளை முன்னெடுத்து அபாயத்தை இனங்காண வேண்டும். இரண்டாவது பிரச்சினை மாதிரிகளின் முடிவுகளில் ஏற்படும் தாமதமாகும். கூடியது 48 மணித்தியாலங்களிலாவது முடிவுகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதை விடவும் தாமதம் ஏற்பட்டால் அபாயமுடைய பிரதேசங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்க முடியாது. முடிவுகள் தாமதமடைவதால் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டதன் பின்னர், ஒரு கொத்தணி உருவான பின்னரே அடுத்தடுத்த தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். எனவே 24 மணித்தியாலங்களில்முடிவுகள் கிடைக்கவேண்டும். மூன்றாவது பிரச்சினை முடிவுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதாகும். அரசதரப்பானாலும், தனியார் தரப்பானாலும் தொடர்புகளை உறுதிப்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார். (வ-இ)

# இன்று முதல் வழமையான பஸ் சேவை



கொழும்பு, நவ. 30

இன்று திங்கட்கிழமை முதல் பஸ்கள் வழமை போன்று இயங்கும் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை ஆராய்வதற்காக நடந்த கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பேருந்து சேவைகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் இயங்கிய தொடருந்து சேவைகளே இந்த வாரமும் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# மதில் சுவர் வீழ்ந்து சிறுவன் படுகாயம்!

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடும் மழை காரணமாக மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் படுகாயமடைந்துள்ளான். புளியங்குளம், தேவநகர்ப் பகுதியைச் சேர்ந்த தனேந்திரன் அர்ஜுன் (வயது10) என்ற சிறுவனே இவ்வாறு படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். சிறுவனின் இரண்டு கைகளும் முறிவடைந்த நிலையில் உடம்பில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளான் என வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ற-இ)



# குருப்பெயர்ச்சி பலன்கள்



**குரு தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்கிறார். குருப் பெயர்ச்சி வாக்கிய பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு 15.11.2020 (ஞயிற்றுக்கிழமை) இரவு 11.48 மணிக்கு மகர ராசிக்கு மாறியிருக்கிறார். இந்த குருப்பெயர்ச்சி ஒவ்வொரு ராசிக்குமான பலன்களை பார்ப்போம்.**

## மகரம்

உயர்ந்த ஆடைகளை அணிய விரும்பும் மகர ராசி அன்பர்களே! சமுதாயத்தில் நன் மதிப்போடு வாழவே நீங்கள் விரும்புவீர்கள். மனைவியிடம் நல்அன்பை செலுத்துவீர்கள். அவர்களின் நல்ல கருத்துக்களை மனமுவந்து ஏற்றுக்கொள்வீர்கள். பிள்ளைகள் இடத்திலும் அன்பு செலுத்துவீர்கள். குரு பகவான் இதுவரை உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் இருந்தார். அவர் பல்வேறு இடையூறுகளை கொடுத்து இருப்பார். பொருளாதார நஷ்டம் ஏற்பட்டு இருக்கும். சிலரது வாழ்க்கையில் துக்ககரமான சம்பவமும் நிகழ்ந்து இருக்கலாம். தற்போது குரு பகவான் உங்கள் ராசிக்கு அடியெடுத்து வைத்துள்ளார். 12 ஆம் இடத்தில் இருந்தது போல கெடு பலன்களை செய்யமாட்டார். குரு 1 ஆம் இடத்தில் இருக்கும் போது கலகம் விரோதம் வரும் என்றும் மந்தநிலை ஏற்படும் என்றும் பொதுவாக கூறப்படுவது உண்டு. ஆனாலும் கவலைபட வேண்டாம். குருபகவான் சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது அனைத்துப் பார்வைகளும் சிறப்பாக உள்ளது. மேலும் அதிகநாட்கள் அவர் இங்கு இருக்க மாட்டார். அவர் 2021 ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை அதிசாரம் பெற்று கும்ப ராசியில் இருக்கிறார். அவர் 2021 நவம்பர் 13ஆம் திகதி அன்று முழுபெயர்ச்சி அடைந்து 2ஆம் இடமான கும்ப ராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம். அவரால் உங்களது ஆற்றல் மேம்படும். இதுவரை இருந்த மந்த நிலை மாறும். துணிச்சல் பிறக்கும். பணவரவு கூடும். தேவையான பொருள்களை வாங்கலாம். பகைவர்களின் சதி உங்களிடம் எடுபடாது. அவர்கள் சரண் அடையும் நிலை ஏற்படும். 2022 ஏப்ரல் 14 ஆம் திகதி அன்று பெயர்ச்சி அடைந்து 3ஆம் இடமான மீன ராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம் இல்லை. அவரால் முயற்சியில் தடை ஏற்படும். அதற்காக கவலை கொள்ளத் தேவையில்லை. குருவின் அனைத்து பார்வைகளும் சிறப்பாக அமைந்து உள்ளதால் உற்சாகம் பிறக்கும். தேவைகள் பூர்த்தி ஆகும். தம்பதியினர் இடையே ஒற்றுமை மேம்படும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். தடைபட்டு வந்த திருமணம் நடக்க வாய்ப்பு உண்டு. மற்றகிரகங்களின் நிலை சனிபகவான் தற்போது 12ஆம் இடமான தனுசுராசியில் இருக்கிறார். அவரால் பொருளாதார இழப்பு வரலாம். வெளியூர் பயணம் ஏற்படும். சனி சாதகமற்ற நிலையில் இருந்தாலும் சனியின் 7ஆம் இடத்துப்பார்வை மிதுனத்தில் விழுகிறது. இது சிறப்பான இடம். அவர் நல்ல பொருளாதார வளத்தைக் கொடுப்பார். பகைவர்களை எதிர் கொள்ளும் ஆற்றல் கிடைக்கும். முயற்சிகளில் வெற்றியை தருவார். உங்கள் ஆற்றல் மேபடும். தனுசு ராசியில் இருக்கும் சனிபகவான் 2020 டிசெம்பர் 26ஆம் திகதி அன்று 12ஆம் இடத்தில் இருந்து உங்கள் ராசிக்கு வருகிறார். இது ஏழரை சனியின் உச்சக்கட்டம். பொதுவாக சனி உங்கள் ராசியில் இருக்கும் இரண்டரை ஆண்டு காலம் உடல்நலம் பாதிக்கப்படலாம், உறவினர்கள் வகையில் வீண்மனக்கசப்பு வரலாம். வெளியூர் வாசம் இருக்கும். அதைக் கண்டு அஞ்ச வேண்டாம். காரணம் அவரது 3ஆம் இடத்துப்பார்வை சிறப்பாக அமைந்துள்ளது. இந்த பார்வையால் அவர் காரிய அனுகூலத்தையும் பொருளாதார வளத்தையும் குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தொழில் விருத்தியையும் தருவார். இபபோது ராகு 5ஆம் இடமான ரிஷபத்தில் இருக்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. அவர் பல்வேறு இன்னல்களையும், இடையூறுகளையும் தரலாம். மனைவி,மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை உருவாக்கலாம். ஆனால் அவரது பின்னோக்கிய 7ஆம் இடத்துப் பார்வை உங்கள் ராசிக்கு 11ஆம் இடமான விருச்சிகத்தில் விழுகிறது. இது சிறப்பான அம்சமாகும். கேது இப்போது 11ம் இடமான விருச்சிகத்தில் இருந்து நல்ல வளத்தையும், நல்ல ஆரோக்கியத்தையும் கொடுப்பார். குடும்பத்தில் மேன்மையை கொடுப்பார். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆற்றலையும் அவர் கொடுப்பார். உறவினர்கள் உங்களை நாடிவருவர். சுபநிகழ்ச்சிகள் கைகூடும். அதுவும் நல்ல சிறப்பான வரனாக அமையும். குழந்தை பாக்கியம் கிட்டும். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை குருவால் ஏற்பட்ட மனக்கவலை ஏற்படும். சுறுசுறுப்பு அற்ற நிலை, இருப்பிட மாற்றம், வீண்அலைச்சல் முதலியன மறையும். எந்த பிரச்சினையையும் முறியடித்து வெற்றிக்கு வழி காணலாம். வசதிகள் பெருகும். மகிழ்ச்சியும், ஆனந்தமும் இருக்கும் அக்கம் பக்கத்தினர் அனுசரணையுடன் இருப்பர். ஆன்மிக ஆன்றோர்களின் ஆசியும், அருளும்கிடைக்கும். குரு மனவேதனையும், நிலையற்ற தன்மையும் கொடுப்பார். பொருளாதார சரிவை ஏற்படுத்துவார். வீண் விரோதத்தை உருவாக்குவார். சிலர் இடமாற்றம் காண்பீர்கள். குருவின் பார்வையால் கோரிக்கைகள் நிறைவேறும். மேல் அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். சகஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை பதவி உயர்வு காண்பர். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். வேலை இன்றி இருப்பவர்கள் வேலை கிடைக்கப் பெறலாம். வியாபாரம் அதிக வருமானத்தைக் காணலாம். கேதுவால் பகைவர்களின் சதியை முறியடிக்கும் வல்லமையை பெற்று இருக்கிறீர்கள். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை பகைவர்களை வெற்றி கொள்வீர்கள். எதிரிகளால் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் விலகும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். அரசின் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பகைவர்களின் சதி உங்களிடம் எடுபடாது. கணினி, அச்சுத் துறை, பத்திரிகை, கோவில் மற்றும் புண்ணிய காரியங்களுக்கான தொழில் ஆகியவை சிறந்து விளங்கும். தங்கம், வெள்ளி, வைரம் நகைகள் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தை பெறுவர். கலைஞர்கள் வசதியுடன் வாழ்வர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புகழ், பாராட்டு வரும். சிலர் அரசிடம் இருந்து விருது பெறவாய்ப்பு உண்டு. ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை இடர்பாடுகள் மறையும். சமுகநல சேவகர்கள் எதிர்பார்த்த புகழ் பாராட்டு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். மாணவர்கள் அயராது உழைக்க வேண்டியதிருக்கும் சிரத்தை எடுத்தே முன்னேற வேண்டியதிருக்கும். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை நல்ல முன்னேற்றம் காணலாம். ஆசிரியரின் ஆலோசனை நல்ல வழியை காட்டும். விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறலாம். விவசாயம் சிறப்படையும். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை பாசி பயறு நெல், கொள்ளு, துவரை, கொண்டைக் கடலை சோளம், மஞ்சள், தக்காளி, பழவகைகள் நல்ல வருவாயை கொடுக்கும். கால்நடை செல்வம் பெருகும். புதிய சொத்து வாங்கலாம். பெண்கள் கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போகவும். பெண்காவலர்கள் சிறப்பான பலனை பெறுவர். புதிய பதவி தேடி வரும். குருவின் பார்வையால் குடும்பத்தில் தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். ஏப்ரல் 4ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரைவேலைக்கு செல்லும் பெண்களுக்கு கோரிக்கைகள் நிறைவேறும். உங்களை புரிந்து கொள்ளாமல் இருந்தவர்கள் உங்கள் மேன்மையை அறிந்து சரணடையும் நிலை வரலாம். உடல்நலம் சிறப்படையும். பித்தம், மயக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்பட்டவர்கள் பூரண குணம் அடைவர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்கள் வீடு திரும்புவர்.

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வேலியை...

ளது. இந்தச் சம்பவம் நேற்றுஇரவு அராலி மத்தியில் இடம்பெற்றுள்ளது. கார்த்திகை விளக்கீடான நேற்று இனந்தெரியாதோர் சிலர் அராலி மத்தி வீதியில் வாகன ரயர் ஒன்றைக் கொளுத்தி வைத்துள்ளனர்.

அவ்வீதியால் வந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் எரிந்த ரயரைத் தூக்கி அருகில் இருந்த வேலியில் வீசினர். இதனால் வேலி தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. இதனை அவதானித்த வீதியால் சென்ற ஒருவர் அந்த ரயயை வெளியே எடுத்து தீயியை அணைக்க முற்பட்டவேளை பொலிஸார் அவரை மிரட்டி தீயை அணைக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர்.

அருகில் இருந்த மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் தீயை அணைக்கும்படி கூறியுள்ளார். இவ்வாறு பொலிஸார் நடந்துகொண்டபோது, இளைஞர்களும் சம்பவ இடத்தில் ஒன்றுகூடியுள்ளனர் இதனை அடுத்து பொலிஸார் அவ் இடத்தை விட்டு அகன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இளைஞர்களே எரிந்த நிலையில் ரயரை உருட்டி விட்டனர் என்றும், இதனாலேயே வேலி எரிந்தது என்னும் தெரிவித்த பொலிஸ் தரப்பு, சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தது. (ப-27)

## காரைநகர்...

ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை 3 நாள்களுக்கு காரைநகர் இந்துக் கல்லூரி மூடப்படுகிறது.

காரைநகரில் கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருக்கமாகப் பழகிய ஆசிரியர் ஒருவர், காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்பிக்கின்றார். அவர் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில் அவரது பிசிஆர் பரிசோதனை வரும் புதன்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்று அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்தால் மறுநாள் வியாழக்கிழமை பாடசாலை ஆரம்பிக்கப்படும்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5)

## வீடு புகுந்து...

தாக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வீட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறை, வல்லிப்புரக்குறிஞ்சி, சிங்கை நகரில் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான வீட்டினருக்கு பிறிதொரு இடத்தில் வயல் காணி ஒன்று உள்ளது. அந்தக் காணியில் ஒரு குழுவினர் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகின்றது. அங்கு மணல் அகழ்வதற்கு காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், மணல் அகழ வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அதன்பின்னர் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் மாலை காணி உரிமையாளர் வீட்டுக்கு வாள்களுடன் சென்று மிரட்டினர் என்றும், அது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தாக்குதலுக்கு இலக்கான வீட்டைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

மணல் அகழும் கும்பலைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று தாக்குதலுக்கு இலக்கானவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு அச்சம் காரணமாக அவர்கள் அயலில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தபோது, வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று அவர்களின் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதமாகியுள்ளது. வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியுள்ளது.

அதன்பின்னர், அவர்கள் தங்கியிருந்த அயல்வீட்டுக்குள்ளும் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலைத் தடுக்க முயன்ற அயல் வீட்டைச் சேர்ந்த முதியவரை வாளால் வெட்டிப் படுகாயப்படுத்தியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அருகில் இருந்த வீடொன்றின் கதவையும் அந்தக் கும்பல் வெட்டிச் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த சி.துரைராசா (வயது68) பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, மணல் அகழ்வு நடக்கும் வயல் காணியின் உரித்துடைய குடும்பத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவரை நேற்றுமுன்தினம் மாலை முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. கி.பிரதீபன் (வயது24) என்ற இளைஞரையே காணவில்லை என்று குடும்பத்தினர் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை குடிதண்ணீர் எடுப்பதற்காக இவர் சென்றிருந்தார் என்றும், அதன்பின்னர் அவரைக் காணவில்லை என்றும் தெரிவித்துள்ள குடும்பத்தினர், நேற்று அவரது மோட்டார் சைக்கிள் வடமராட்சி, முராவில் பகுதியில் சேதமடைந்தநிலையில் மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர். டிப்பர் வாகனத்தால் மோதி சேதமாக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் காணப்பட்டது. எனினும் இளைஞரைப் பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும்பொலிஸார், டிப்பர் ஒன்றைச் சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றி விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(எ-26,20)

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவன் **அகிலன்** அவர்களின் தந்தையார்

**துரைசிங்கம் சிறீதரன்**

(முன்னாள் விரிவுரையாளர் கொக்குவில்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**Northern Residence**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**நாகலிங்கம் ஜெகதீஸ்வரன்**

பிறப்பு 01 . 03 . 1955



இறப்பு 29 . 11 . 2020

கோவில் வீதி. மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் அவர்கள் 29.11.2020 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.11.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று. இறுதி ஆராதனை இருபாலை கிழக்கு நியூ லிவிங் பிளேம் திருச்சபையில் பி.ப 3.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை மேற்கு, சுன்னாகம்.**
**0768692479, 0763736236**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**சிவக்கொழுந்து கமலாதேவி**

மாணிக்கபிள்ளையார் வீதி. வீமன்காமம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து கமலாதேவி 28.11.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து (புகையிரத நிலைய உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர்களான கனகம்மா, நவரத்தினம், நடேசபிள்ளை மற்றும் பாலசுந்தரம் (தேவன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சொர்க்க லிங்கம் மற்றும் வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான மனோன்மணி, வசந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் ஜெயராசா, இந்திரராசா, சந்திரராசா ஆகியோரின் சிறிய தாயும், கீதா, வினோ, தர்சினி, வரதன், சூட்டி, கலா, மல்லிகா, சுமதி, ரசந்தினி, நாகராசா,குமுதா, பாமி, சுபா, அமுதா, கிரி, கமல், கார்த்திகா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் (மாணிக்கப்பிள்ளையார் வீதி, வீமன்காமம், தெல்லிப்பழை) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர் சார்பாக**
**சகோதரன் தேவன்**
**077 618 4597**

**மாணிக்கப்பிள்ளையார் வீதி,**
**வீமன்காமம்,**
**தெல்லிப்பழை.**

## 10ஆம் ஆண்டு நினைவு நாள்



**அமரர் நாகமணி பூமணி**

தோற்றம் 01.01.1930

மறைவு 30.11.2010

பண்பால் உயர்ந்து பாசத்தால் அரவணைத்து
நாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வம் அம்மாவே
ஆண்டுகள் பத்து ஆனாலும் உங்கள் ஞாபகங்கள்
மீண்டும் மீண்டும் மனதில் உருண்டோட
மீளாத் துயரில் தவிக்கின்றோம் என்றென்றும்
எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

## மாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மந்துவில் றோ.க.த.க. பாடசாலை

எமது பாடசாலையில் இவ் வருடம் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 06 மாணவர்களில் மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்.



தனதீஸ் திசாந்த் - 174



செல்வகுமார் கம்சன் - 173



ஜெயக்குமார் ஸோபிகா - 166

ஏனைய மூன்று மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்

விக்னேஸ்வரராஜ் சாம்பவி - 158
விஜயகுமார் நவீன்- 156
சந்திரராசா சதுர்சன் - 144

Best Wishes

இந்த மாணவர்களை வாழ்த்துவதோடு இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும் வழிப்படுத்திய அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:

பாடசாலைச் சமூகம் - யா/ மந்துவில் றோ.க.த.க. பாடசாலை.


# ஆயிரத்தைக் கடந்தது சிறைக் கொத்தணி

## இதுவரை 1091 பேருக்குத் தொற்று

கொழும்பு, நவ.30

சிறைச்சாலைக் கொத்தணியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றும் புதிதாக 183 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். இவர்கள் அனைவரும் மஹர சிறைச்சாலையில் உள்ளவர்கள் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அதேவேளை, இதுவரை வெலிக்கடை சிறைச்சாலையில் 386 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 157 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் 58 சிறை அதிகாரிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 6 பேர் குணமடைந்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரை 113 கைதிகள் குணமடைந்துள்ளனர். இதுவரை சிறைச்சாலைக் கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 91ஆக அதிகரித்துள்ளது. (எ-22)


## திருமணப் பொன்விழா வாழ்த்து



இன்று திருமணப்பொன்விழா ஆண்டு நிறைவை காணும்
எமது தாய் தந்தை

**சிவாகம கிரியாபானு சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்** (பிரதமகுரு கோப்பாய் வீரபத்திரசுவாமி கோயில் பார்வதி பரமேஸ்வரன் ஆலயம் (யாழ். பல்கலைக்கழகம்)
**ஸ்ரீமதி சுகந்தி குந்தளாம்பிகை அம்மா** தம்பதியரின் பாதம் பணிந்து வணங்கி ஆசிவேண்டுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
021 223 2270
077 9679030

வீரபத்திரர் கோயில்,
கோப்பாய்.


# மட்டு. ஊடகவியலாளர் பொலிஸாரால் கைது!

மட்டக்களப்பு, நவ.30

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளராக கடமையாற்றி வந்த முருகுப்பிள்ளை கோகுலதாசன் (வயது 37) என்ற ஊடகவியலாளரே கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படங்களை முகநூலில் பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அந்த ஊடகவியலாளரை வாழைச்சேனை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மூன்று நாள்கள் தடுத்து வைப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் வாழைச்சேனை பொலிஸார் பெற்றுள்ளனர்.

மூன்று நாள்களின் பின்னரே ஊடகவியலாளர் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)


## மாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/தென்னியன்குளம் அ.த.க. பாடசாலையில்
2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 03 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்



ஞானகுமார் நிறோயா - 180



சிவகுமார் மதுஷா - 177



அரவிந்தன் லக்சிகா - 164

Best Wishes



வகுப்பாசிரியர்
செல்வி
மகேந்திரநாதன்
திலீபனா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களைக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அரவிந்தன், சிவகுமார், ஞானகுமார் குடும்பத்தினர்.



## வாழ்வகம்
## விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்
## புதிய மாணவர் அனுமதி – 2021

வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம், சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள

**வாழ்வக நிறுவனத்தில்**
**கண் பார்வையற்ற** அல்லது **குறைந்த பார்வையுடைய** பிள்ளைகளை
**இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள்**
**2021 ஆம் ஆண்டுக்காகக் கோரப்படுகின்றன**

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும், கல்விக்கான அனைத்து வசதிகளும் கவின் கலைகள், மேலதிக வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், கணினிக் கற்கைகள், தியானம், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளை உடைய இலங்கை வாழ் தமிழ் மொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 23.12.2020. இக்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு** : பிள்ளைகளை விடுதியில் அனுமதித்து, சனி, ஞாயிறு தினங்களில் பெற்றோர் சந்திக்க வசதி செய்வதுடன், பாடசாலை விடுமுறை தினங்களில் விரும்பின் தமது இல்லங்களுக்குச் சென்றுவரவும் அனுமதிக்கப்படுவர்.

தொடர்பு : தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி: 021 224 0146, 076 828 6331

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 03.11.1945 | 30.11.2018 |

## சின்னப்பு யோசவ் செல்வநாயகம்

(ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்,
ஆசீர்வணிக நிலைய உரிமையாளர்)
30.11.2020

விதையாய் கிடந்ததை
உம்மைச் செதுக்கி
விருட்ஷமாக்கினீர்!

நல்ல நாணயத்தினால்
நாணயம்
சேர்த்தீர்!

நற்குடியினை ஆக்கும்
நற்தொழில்
தந்தீர்!

கல்விச் சமூகமொன்றினை
உமது
உறவாக்கினீர்!

அத்தனை துன்பங்களையும்
நகைச்சுவைக்குள்
மறைத்தீர்!

நீங்கள் சிந்திய
வியர்வைத்துளிகள்
எமது வீடுகளில்
விளக்காய் எரிகிறது!

எங்களது ஒவ்வொரு
புன்னகையிலும்
உங்களது தியாகம்
தெரிகிறது!

நேர்மையாய் உண்மையாய்
நல் மனிதர்களாய் நலம்
-வாழ
வழிதந்தீர்!

எம்முயர்வுகள் ஒவ்
-வொன்றிலும்
உங்களது உயிர் நிலையாகி
வாழும்!

J10855(16/17)

குடும்பத்தினர்

ஆசீர் வணிகநிலையம்.
202, KKS வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்
யோ.செ. அலெக்ஸ் நிக்ஸன்
கி.சே. அனிற்றா சுபோஜினி
யோ.செ. ரஜீவ் LONDON

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12.09.1935 | 22.11.2018 |

அமரர்

## தம்பையா இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)


திதி: பௌர்ணமி

அன்பான அப்பாவே பாசத்தின் திருவுருவே
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்திட்டாலும்
உங்கள் பிரிவின் துயரமது ஆறாது ஒருபோதும்.

சிங்கராயர் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 24.09.1939 | 29.11.2020 |

## செல்லையா சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சின்னத்தம்பி நேற்று (29.11.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பாக்கியவதியின் அன்புக் கணவரும் இஷானந்தன் (ஆஸ்திரேலியா), காண்டீபன் (இலங்கை), முகுந்தன் (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசினி, பாலரஞ்சினி, தாரணி ஆகியோரின் மாமனும், நடராசா, குணமணி, அன்னரத்தினம், நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், துரைராசா, நித்தியானந்தன், இரவிந்திரன் (ஜேர்மனி), கமலாதேவி (கனடா), விமலாவதி (ஜேர்மனி), சுகுணசோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி.காண்டீபன் - மகன்

# பொது அறிவித்தல் - 2021

# வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்.

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதனவரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களிலும் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1. ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்தவரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2. ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3. குறித்த காலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப் பணமும் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவுசெய்தல் | 2021ம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள் , மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்படவேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதிபெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாது விடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2021 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2021 ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2021ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2021ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2021ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்கவேண்டும் என்பதோடு கட்டிவளர்க்காது விட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக் கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடைசெய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்தோ அல்லது எரித்தோ சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத் தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறிகள், இறைச்சிகள் என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக் கொள்ளமுடியும். |
| 12 | கனரகவாகன சேவை | என்ஜின் றோலர் (Engine Roller) மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரியகட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப் பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2021 ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2021ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

த.நடனேந்திரன்
தவிசாளர்,
வலிகாமம் மேற்குபிரதேசசபை,
சுழிபுரம்.

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை – சுழிபுரம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2021

2021 ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருள்கள் மற்றும் சேவைகளினை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருள்கள் விவரம் |
|---|---|
| A – 01 | காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் உபகரணங்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A – 03 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 04 | மின்சாரப் பொருள்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |
| A – 05 | கணனி, இலத்திரனியல் பொருள்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 06 | திரைச்சீலைகள் மற்றும் துணிவகைகள் |
| A – 07 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மற்றும் அதுசார்பான பொருள்கள் |
| A – 08 | சுத்திகரிப்பு உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் மற்றும் தொற்று நீக்கிகள் |
| A – 09 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள் |
| A – 10 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள் |
| A – 11 | கட்டிட இரும்புப் பொருள்கள், வாணிஸ், பெயின்ட், மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A – 12 | கற்கள், மண் வகைகள் |
| A – 13 | தீராந்திகள், பலகைகள் |
| A – 14 | நீர் விநியோகப் பொருள்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள் |
| **தொகுதி B** | **சேவைகள் விவரம்** |
| B – 01 | கணினி, நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B – 02 | மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தமும் மீளமுறுக்குதலும் |
| B – 03 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B – 04 | அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் திருத்தமும் பராமரிப்பும் |
| B – 05 | அச்சிடுதலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B – 06 | பாதுகாப்பு சேவையும், சுத்திகரிப்பு சேவையும் |
| B – 07 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |
| B – 08 | வாகன திருத்தம் |
| B – 09 | வாகன சுத்திகரிப்பு |
| B – 10 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B – 11 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B – 12 | கோலவுடை, சீருடை தைத்தல் |
| **தொகுதி C** | **ஒப்பந்த வேலைகள் (CIDA)** பதிவு உள்ளவர்கள் மட்டும் |
| C – 01 | கட்டிட நிர்மானமும் திருத்தமும் |
| C – 02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| C – 03 | கிணறு அமைத்தல் |
| C = 04 | வீதியில் உள்ள சிறிய பாலங்களை நிர்மானமும் திருத்தமும் |

**நிபந்தனைகள்**

1. பதிவுகள் 2021 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்வோர் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக ரூபா 500/= பதிவுக்கட்டணமாகவும் ஒப்பந்த வேலைகளுக்கு பதிவு செய்துகொள்வோர் ரூபா 1000/= பதிவுக்கட்டணமாகவும் செலுத்தி தலைமையலுவலகத்தில் 28.12.2020 ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
4. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
5. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப் படுவார்கள்.
6. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராபரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசிலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
7. விண்ணப்பப்படிவங்கள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைகளுக்கான விண்ணப்பம் - 2021 எனக் குறிப்பிட்டு "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என்னும் முகவரிக்கு 28.12.2020ஆம் திகதிக்கு முன்பதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

த.நடனேந்திரன்,
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

## இடைநடுவே கைவிட்டோடும் இந்தியாவை நம்பமுடியாது

இப்படிக் கூறுகின்றது ராஜபக்ச அரசு

கொழும்பு, நவ.30

'இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இடைநடுவே கைவிடும் இந்தியா போன்ற நாடுகளைத் தொடர்ந்தும் நம்பி அவர்களிடம் தங்கியிருக்காது இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பல மான நிறுவனங்களுடனும் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடனும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது'.

இவ்வாறு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமாக இலங்கை அதன் அமைவிடத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாத காரணத்தால் சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் எம்மை விடப் பலமான நாடுகளாக வளர்ச்சி கண்டுள்ளன. எனினும், இனியும் நாம் அதே தவறிழைத்து விடக்கூடாது.

எனவே, அம்பாந்தோட்டை துறை முகத்தின் மூலமாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கான எரி பொருள் சேவையை வழங்கவும், திருகோணமலை துறைமுகத்தைப் பயன்படுத்தி இந்தியாவினூடாக மேற்கு கிழக்கு நோக்கி பயணிக்கும் கப்பல்களுக்கான எரி பொருள் சேவையை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். எமது நாட்டைச் சுற்றி கனிய வளங்கள் உள்ளன. இயற்கை எரிவாயு, எண்ணெய் வளங்கள் உள்ளன. ஆனால், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள எம்மால் முடியாது போய்விட்டது. இதில் பல இடங்களில் நாம் தவறிழைத்துவிட்டோம்.

2010ஆம் ஆண்டில் இந்தியாவுடன் நாம் இது குறித்த இணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்த வேளையில் அவர்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாக இடைநடுவே விலகிக் கொண்டனர். எனவே, நாம் இந்தியாவை மாத்திரம் நம்பி அவர்களில் தங்கி இருக்காது, இடைநடுவே எம்மைக் கைவிட்டுச் செல்லாத பலமான நிறுவனங்களுடன் அந்த நிறுவனங்கள் சார்ந்த நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது என்றார். (ம-22)

**நாகபூஷணி திருமண சேவை**
**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**
(மணமகள்களுக்கு மட்டும்
28.11.2020 முதல் 02.12.2020
வரை) மிகபொருத்தமான
மணமக்கள் ஜாதகங்கள் உடன்
தரப்படும். ஞாயிறும் திறந்திருக்கும்.
இல.5, ஐந்தாம் ஒழுங்கை பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
(பேபி ஸ்ருடியோ பக்கத்து லேன்)
021 222 9306, 077138 7596, 071 999 9306

## நெஞ்சம் நெருடும் நினைவுகளோடு...

**நினைவிழந்த 20 இல்** **ஈரவிழிகளோடு 24 இல்**

மண்ணுலகில்
03.08.1942



விண்ணுலகில்
30.11.2000

அமரர்
**இராசு செல்வரட்ணம் (சித்தப்பா)**
(உரிமையாளர், அம்பாள் மரக்காலை
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்)

அணையாத் தீபங்களே! ஆளுமையின் அதிகாரிகளே!
அரும்பெருந்தகைகளே கடமை உணர்வில் தன்நிகர் இல்லா தலைவர்
நீங்களே! உள்ளம் என்னும் கோயிலாய் ஊர்போற்றும் உத்தமராய்
பசுமையின் மேன்மையாய் பணிவின் பெருமையாய் கருணைக்கடலாய்,
புன்னகையின் இருப்பிடமானவரே! காரிருள் சூழ்மேகமாய் எம்குலம் சூழ
வாழ்ந்தீர்களே! வாழ்வியல் தத்துவமாய், எம் நினைவில் நீங்கள்
என்றும் வாழ்வீர்கள் உங்கள் கனிமொழி இன்றும் எம் செவிப்பறையை
காவுகொள்கின்றன கடலலைபோல் பாரிலே நிலையில்லாப் பிறவிகள்
நாங்கள் உங்கள் பேச்சில் எங்கள் செயல் இருக்கும்
மூச்சில் உயிர் இருக்கும்
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*
**உங்கள் ஆத்மா சாந்திபெற அன்னை**
**வீரமாகாளியின் பாதம் வணங்கி பிரார்த்திக்கின்றோம்.**

மலர்ந்தாய்
19.10.1976



மறைந்தாய்
21.08.1996

அமரர் செல்வி
**றஜனி செல்வரட்ணம்**
(வர்த்தகப்பிரிவு -A/L 1995, மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி)

"செல்வபதி" 256, நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

## மாவீரர் நாளை...

யாழ். பல்கலைக்கழக மாணவன் பொலிஸாரின் தடை உத்தரவையும் மீறி நேற்று தீபம் ஏற்றினார். இந்த நிலையில் அவரைப் பொலிஸார் கைது செய்ததில் என்ன தவறு இருக்கின்றது?, எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையான கார்த்திகை விளக்கீட்டுக்கு தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தடைகளை ஏற்படுத்தியமை தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலியவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாவின் தாக்கத்தால் நாடு அல்லோலகல்லோலப்படுகின்றது. இந்த நிலையில், பொது இடங்களில் நிகழ்வுகள் தேவைதானா?

தற்போதைய நிலைமையில் தமிழ் மக்கள் தங்கள் பண்டிகைகளை வீடுகளில் இருந்தே கடைப்பிடிக்க வேண்டும். அதைவிடுத்து அவர்கள் வெளியில் வந்து ஒன்றுகூடுவதைத் தவிர்க்க வேண்டும்.

இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டிலுள்ள மூவின மக்களுக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோளாகும். மக்கள் பொலிஸாரைச் சீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றபோது அவர்களைக் கைதுசெய்யப் பொலிஸாருக்கு சட்டத்தில் இடமுண்டு, என்றார். (ஓ.5,22)

## கோத்தாபய....

ஏற்றிய அப்பல்கலைக்கழக மாணவன் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தமையும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இது கோத்தாபய அரசின் உச்சபட்ச அராஜகமாகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கார்த்திகை தீபம் தமிழ் மக்கள் கொண்டாடும் பழமையான பண்டிகைகளில் ஒன்று. அதைத் தடுத்து நிறுத்த பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் யார் அதிகாரம் கொடுத்தது?

அரசின் உயர்மட்டத்தால் பொலிஸாரும் இராணுவத்தினரும் தவறாக வழிநடத்தப்படுகின்றார்கள்போல் தெரிகின்றது.

போரில் இறந்த தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்தத் தடை விதித்த இந்த அரசு, தற்போது தமிழ் மக்கள் தமக்குரிய பண்டிகைகளைக் கொண்டாடவும் அனுமதி மறுத்துள்ளது. இதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அரசு தனது படைகளைத் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவி விடுவதை உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் வீதிகளில் மக்கள் இறங்கு அரசுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைதான் வரும், என்றார். (ஓ.5,22)

## கார்த்திகை...

யாழ்ப்பாணம், நவ. 30

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையான கார்த்திகை விளக்கீட்டை கூட கொண்டாட முடியாத சூழலை கோத்தா அரசின் இராணுவமும் பொலிஸாரும் நேற்று ஏற்படுத்தினர். கார்த்திகை விளக்கீட்டுக்காக அலங்கரிக்கப்பட்ட வாழைக் குற்றிகளை சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்ததுடன், சிட்டிகளையும் ஏறி மித்து உடைத்து நொருக்கினர். பல இடங்களில் விளக்கீடுகளை மேற்கொள்ள வேண்டாம் என்று மக்களை அச்சுறுத்தியதுடன், ஆலயங்களில் சொக்கப்பானை எரிப்பதனையும் தடை செய்தனர்.

மாவீரர் நாளில் மக்கள் ஈகைச்சுடரேற்றி அஞ்சலிப்பதை தடை செய்திருந்த பாதுகாப்புத் தரப்பினர், மாவீரர் நாள் நிறைவடைந்து இரண்டு நாள்களின் பின்னர் வந்த கார்த்திகை விளக்கீட்டையும் முடக்க முயற்சித்தனர். கார்த்திகை விளக்கீடு தொடர்பில் இந்து சமயப் பேரவை உள்ளிட்ட இந்து அமைப்புக்கள் தெளிவான விளக்கத்தை வழங்கியிருந்ததுடன், கார்த்திகை விளக்கீட்டை தவறாகப் புரிந்து கொண்டு தடை ஏற்படுத்தி விடவேண்டாம் என்று பாதுகாப்புத் தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தன. இந்த விடயம் ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது. இதன் பின்னரும், பாதுகாப்புத்தரப்பினர் விளக்கீட்டை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் மல்லாகம் சாலம்மை ஆலயத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு தீபமேற்ற ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் அதனை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அங்கு விளக்கீட்டுக்காக வைக்கப்பட்ட வாழைக் குற்றிகளையும் பொலிஸார் தமது சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்துள்ளனர்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலிலும் விளக்கீடு செய்யப்படக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனுக்குத் தெரிவித்ததை அடுத்து அவரின் தலையீட்டை அடுத்து விளக்கீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

### முல்லைத்தீவு

முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்களின் வீடுகளுக்கு சென்ற படையினர், பொலிஸார் வாழைக்குற்றிகளை பிடுங்கி எறிந்துள்ளதுடன் விளக்கீட்டு பந்தங்களையும் அகற்றினர். உடையார் கட்டு தெற்கு மற்றும் குரவில் பகுதியில் படையினரின் முகாம்களுக்கு அருகில் உள்ள மக்கள் கார்த்திகை விளக்கீட்டை செய்ய முடியாதவாறு அச்சுறுத்தியுள்ளனர்.

### கிளிநொச்சி

பரந்தன் பகுதியில் விளக்கீட்டுக்காக தீபம் ஏற்றிய வயோதிபத் தம்பதியர் இருவர் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டனர். அத்துடன் அவர்களது வீட்டு வளவில் ஏற்றப்பட்டிருந்த சுட்டிகளையும் தூக்கி எறிந்ததுடன் தமது சப்பாத்துக் கால்களால் ஏறி மிதித்து உடைத்துள்ளனர்.

சிவில் உடையில் இரண்டு இராணுவத்தினரும் சீருடையுடன் வந்த இரண்டு இராணுவத்தினரும் பரந்தன் இராசாயனக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாகவுள்ள வீட்டுக்கு சென்று கார்த்திகைத் தீபங்களை தூக்கி வீசிவிட்டு அவற்றை காலால் மிதித்து அணைத்தனர். வீட்டிலிருந்த பெண்களை அச்சுறுத்தி தகாத வார்த்தைகளால் பேசியுள்ளனர். இராணுவத்தினர் அட்டூழியங்களை ஒளிப்பதிவு செய்த ஊடகவியலாளர்களையும் மிரட்டியதுடன் அவர்களின் காணொலிகளையும் அழித்துள்ளனர். (ஓ.5,19,55)

## தீவகப்....

சின் செயலார் லட்சுமணன் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் மற்றும் வேலணை பகுதியில் இருவருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ள நிலையில் தொற்றுக்கு உள்ளானவர்கள் சமூக மட்டத்தில் நடமாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்றுக்கு உள்ளானவருடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தீவகப் பாடசாலைகள் இயங்குமா என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே பாடசாலைகள் வழமைபோல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் இருப்பவர்கள் பாடசாலைகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான விசேட கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது. (ஓ.ம)

## மஹர...

கொழும்பு, நவ. 30

கம்பஹா மாவட்டத்திலுள்ள மஹர சிறைச்சாலையில் நேற்று மாலை கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட அமைதியின்மையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு அதிகாரிகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 கைதிகள் பலியாகியுள்ளனர். அத்துடன் 25 கைதிகள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த கைதிகள் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதேவேளை, உயிரிழந்த கைதிகளின் சடலங்களும் ராகம மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

மஹர சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளுள் 183 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பான தகவல் வெளியான கையோடு கைதிகள் குழப்பமடைந்தனர். கூச்சலிடவும் ஆரம்பித்தனர்.

இந்நிலையில் நேற்று மாலை சிறைச்சாலையின் பிரதான நுழைவாயிலை உடைத்துக்கொண்டு தப்பிச்செல்வதற்கு கைதிகள் சிலர் முயற்சித்தனர். அவர்களை தடுத்து நிறுத்துவதற்கு சிறைச்சாலை காவலர்கள் ஆரம்பத்தில் குறைந்தபட்ச அதிகாரத்தையே பயன்படுத்தினர் எனவும், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாததையடுத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது எனவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து, சிறைச்சாலைக்குள் தீ பரவியது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக 6 தீயணைப்பு வாகனங்கள் நேற்றிரவு அங்கு அனுப்பிவைக்கப்பட்டன என்று தீயணைப்புப் பிரிவு தெரிவித்தது.

வெளியிடங்களில் இருந்து பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் நேற்றிரவு குறிப்பிட்டார்.

சிறைச்சாலைக்குள் இருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன என்று நேற்றிரவு மக்கள் தெரிவித்தனர்.

சிறைச்சாலைக்கு முன்னால் கைதிகளின் உறவினர்கள் கூடியுள்ளதால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் ஆராய்வதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ஓ.5,22)

## நீதிமன்ற...

களில் நேற்று தமிழ் மக்கள் ஈடுபட்டார்கள். இதை எப்படி நாம் அனுமதிப்பது? இவ்வாறு கேள்வி எழுப்பினார் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண.

இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையான கார்த்திகை விளக்கீட்டுக்கு தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தடைகளை ஏற்படுத்தியமை தொடர்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் கைதாகி விடுவிக்கப்பட்டமை தொடர்பிலும் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'பொலிஸார் மறிக்க மறிக்க யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவர் நேற்று பல்கலைக்கழக வளாகத்துக்குள் தீபங்களை ஏற்றியுள்ளார். பொலிஸாரின் உத்தரவை மீறிய காரணத்தாலேயே அவர் கைதுசெய்யப்பட்டார். பல்கலைக்கழக மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். அதைவிடுத்து அவர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படக்கூடாது. மாணவர்களின் நேற்றைய செயற்பாடு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய அதில் நேரடியாகப் பங்கெடுத்த மாணவன் ஒருவரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்' என்றார். (ஓ.5,22)

## கே.கே.எஸ்....

பிற்பகல் ஒரு மணியளவில் நடந்துள்ளது. தையிட்டியைச் சேர்ந்த 19 வயதுடைய இருவரே நீரில் மூழ்கியுள்ளனர். நடேஸ்வரா கல்லூரியின் 2021ஆம் ஆண்டு உயர்தரக் கலைப் பிரிவு மாணவனான சி.சிவநிரோஜன் என்பவரே உயிரிழந்தவராவார். த.தவச்செல்வம் என்பவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று மதியம் காங்கேசன்துறையில் உள்ள தல்செவன இராணுவ நட்சத்திர விடுதிக்கு அருகில் உள்ள கடற்கரையில் குளிக்கச் சென்றபோதே இவர்கள் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஒருவரின் உடல் நேற்று மாலை கரையொதுங்கியது. மற்றையவர் நேற்று இரவுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கடற்படையினரின் உதவியுடன் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## விளக்கேற்றிய...

யாழ்ப்பாணம், நவ.30

கார்த்திகை விளக்கீட்டுக்காக கிணற்றடியில் விளக்கு வைக்கச் சென்ற முதியவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது. 70 வயது முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படும் என்றும், இன்று இறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விளக்கு ஏற்றிய...

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்துக்கு நேரே உள்ள பண்பாட்டு வாயிலில் கார்த்திகை தீபம் ஏற்றிய மாணவன் கைதுசெய்யப்பட்டு, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளான்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் ம.தர்ஷிகன் என்பவரே நேற்று இரவு 7.45 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாயிலின் முன்பாக இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்துக்கு நேர் முன்பாக அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக பண்பாட்டு வாயிலில் நேற்று மாலை 6 மணிக்கு தீபங்களை ஏற்றுவதற்கு மாணவர்கள் சிட்டிகளுடன் தயாராகியிருந்தனர்.

பல்கலைக்கழக வளாகத்துக்குள் செல்லும் வாயில்கள் மூடப்பட்டதால் பரமேஸ்வரன் ஆலயத்தில் தீபம் ஏற்ற முடியாத நிலையில் மாணவர்கள் இவ்வாறு பண்பாட்டு வாயிலின் வெளியே தீபங்களை ஏற்ற முற்பட்டனர்.

அதனை அறிந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்த இடத்துக்கு வந்து தீபங்கள் ஏற்றுவதற்கு அனுமதியில்லை என்று தெரிவித்தனர்.

எனினும் மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளில் தீபங்களை ஏற்றுமாறு பொலிஸார், மாணவர்களுக்கு அறிவுறுத்தினர். தமது அறிவுறுத்தலை மீறி தீபங்கள் ஏற்றினால் கைதுசெய்யப்படுவீர்கள் என்று பொலிஸார் எச்சரித்திருந்தனர்.

இந்த நிலையில் 7.45 மணியளவில் தீபம் ஏற்றிய விஞ்ஞான பீட மாணவன் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், வி.மணிவண்ணன் இருவரும் மாணவனை விடுவிக்க பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்தினர். மாணவனிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் பொலிஸார் அவரை விடுவித்தனர்.

இதேவேளை, மாணவன் கைது பற்றி அறிந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு மாணவனின் விடுதலையை வலியுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார். (ஒ.26)

### மேலும்...

கொழும்பு, நவ. 30

கொரோனாத் தொற்றால் மேலும் 7பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

கொழும்பு 2 ஐச் சேர்ந்த 50 வயது பெண், கொதட்டுவ பகுதியைச் சேர்ந்த 48 வயது ஆண், மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த 73 வயது ஆண், சிலாபம் பகுதியைச் சேர்ந்த 70 வயது ஆண், அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 90 வயது பெண், மருதானைப் பகுதியைச் சேர்ந்த 78 வயது ஆண், கொழும்பு 13ஐச் சேர்ந்த 90 வயதுப் பெண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றும் 496 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 484 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 17 ஆயிரத்து 2 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 366 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் (ஒ.22)

# பாகிஸ்தான் அணியை தாக்கும் கொரோனா!

நியூஸிலாந்து, நவ.30

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரக்கெட் அணியில் மேலும் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் குழாமில் மொத்தமாக 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று நியூஸிலாந்து சுகாதர அமைச்சும் கிரிக்கெட் நிர்வாகமும் தெரிவித்துள்ளது.

இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை சுகாதார அதிகாரிகள் அடையாளம் கண்டு வருகின்றனர்.

நவம்பர் 24 ஆம் திகதி நியூஸிலாந்துக்கு பாகிஸ்தான் அணியினர் வருகை தந்தவுடன் நடத்தப்பட்ட முதல் பரிசோதனைகளில் சர்பராஸ் அஹமட், ரோஹைல் நசீர், நசீம் ஷா, மொஹமட் அப்பாஸ், ஆபிட் அலி மற்றும் டேனிஷ் அஜீஸ் ஆகிய ஆறு வீரர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டது. (றஇ)



# வெளுத்துக் கட்டியது ஆஸி. தொடரை இழந்தது இந்தியா

சிட்னி, நவ.30

ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே நடந்த இரண்டாவது ஒருநாள் தொடரில் இந்திய அணி 51 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் இரு ஆட்டங்களில் வென்று தொடரைத் தன்வசப்படுத்தியது ஆஸ்திரேலியா.

சுற்றுலா இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, லபுஸ்ச்சென் - ஸ்மித் இணையின் அசத்தலால் 4 இலக்குகளை இழந்து 389 என்ற இமால இலக்கைப் பெற்றது. அதிரடியாக ஆடிய ஸ்மித், 62 பந்துகளில் சதமடித்தார். 64 பந்துகளில் 104 ஓட்டங்களைப் பெற்றார். டேவிட் வோர்னர் 77 பந்துகளில் 83 ஓட்டங்களைப் பெற்றார். மார்கஸ் லபுஸ்ச்சன் 61 பந்தில் 70 ஓட்டங்களை விளாசினார், க்ளன் மக்ஸ்வெல் 29 பந்தில் 63 ஓட்டங்களையும், அரோன் பிஞ் 69 பந்தில் 60 ஓட்டங்களை பெற்றனர். ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் அதிரடியாக ஆட ஆஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. பந்துவீச்சில் மொஹமட் சமி 73 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டை வீழ்த்தினார். ஏனையோர் சோபிக்கவில்லை.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 9 இலக்கை இழந்து 338 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அணி சார்பில் விராட் கோஹ்லி 89 ஓட்டங்களையும், லோகேஸ் ராகுல் 76 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் பட் கம்மின்ஸ் 67 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், அடம் ஷம்பா 62 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜோய் ஹஷ்லிவூட் 59 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (எ)

# தோழியிடம் "புரப்போஸ்" களைகட்டிய மைதானம்!

மெல்பேர்ன், நவ.30

ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் சுவாரசியமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

ஆஸ்திரேலிய அணி நிர்ணயித்த இமாலய இலக்கைத் துரத்த முடியாது இந்திய அணி ஒருபுறம் மண் கவ்வ, மைதானத்தில் ஒருவர் வாழ்க்கையின் பெரும் மைல் கல்லை எட்டிப் பிடித்திருக்கின்றார்.

மைதானத்தில் இருந்த ரசிகர்கள் கூட்டத்தில் இந்திய ரசிகர் ஒருவர் தனது ஆஸ்திரேலிய தோழியிடம் தனது காதலை வெளிப்படுத்தினார். அதற்கு அந்தப் பெண்ணும் சரி என, மைதானமே களைகட்டியது.

இருவரும் கட்டி அணைத்து முத்தமிட்டு கொண்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதைமைதானத்தில் இருந்த ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரரான மேக்ஸ்வெல் கைதட்டி வரவேற்றார். அவரும் இந்திய பெண் ஒருவரையே நிச்சயதார்த்தம் செய்திருக்கின்றார். (எ)



**காணி தேவை**

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்பு:076 2212 037

**காணி விற்பனைக்கு**

- வசாவிளானில் குழாய்கிணறு, மின்சார வசதியுடன்கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு பரப்பு 290000/=
- இயக்கச்சியில் 10 ஏக்கர் விற்பனைக்கு மொத்த விலை 3800000/=

விலை பேசிதீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 423 5458
077 538 9987



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.